
# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

நவம்பர் 1970



விலை 35 சதம்

கலை, இலக்கிய மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வெளிவருகிறது!

நம் நாட்டுப் பண்பு

நமக்குள்ள கலாச்சாரம்

இவைகளை சித்தரிக்கும்

வி. எஸ். ரி. பிலிம்சாரின்



# குத்துவிளக்கு

*தயாரிப்பு:* V. S. துரைராசா

*இசை:* முத்துசாமி

*படப்பிடிப்பு-டைரக்ஷன்:* W. S. மகேந்திரன்

*கதை-வசனம்-பாடல்கள்:*
ஈழத்து ரத்தினம்

Wrapper by Co-op Press Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடுதல் பாடுதல் சித்திரம்-கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

கொடி 4 | நவம்பர் — 1970 | மலர் 30

# மல்லிகை

அலுவலகம்:
60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)

மல்லிகையில் வெளிவரும் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவரும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

இந்த மலரில்...

இலங்கையின்
பிரபல படைப்பாளிகள்
எழுதுகின்றனர்

அட்டைப்படம்
ஆ.குருசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரியைத் தூண்டிவிட்டால்தான் விளக்குப் பிரகாசமாக எரியும்!

புதிய வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் பல பணத் திமிங்கிலங்கள் செய்வதறியாது சிக்கித் திணறிப் பெருமூச்சு விட்டு, முட்டி மோதி சவால் விட்டு வஞ்சந் தீர்க்க சந்தர்ப்பம் பார்த்து ஏங்கி இருக்கின்றன.

பாராட்டத்தக்க பாரிய தாக்குதல்.

இலட்சாதி இலட்சமாக பணத்தைப் புளக்கத்தில் விடாமல் பதுக்கி வைத்து, புதிய தொழில்களை உருவாக்காமல் பெட்டியில் பூட்டி வைத்து, பண நோட்டுகளுக்குத் தூப தீபம் காட்டி ஆராதனை செய்து வந்தவர்களிடம் முடங்கிக் கிடந்த பணத் தாள்கள் வெளிக் கொணரப் பட்டதின் நன்மையை நாம் உணர இன்னும் சில மாதங்கள் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

இதையும் நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

முடக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை இந்த நாட்டுக் கலை, கலாச்சாரச் சினிமாத் துறைக்குச் சம்பந்தப் பட்டவர்கள் பயன் படுத்தியிருந்தால், இவர்களை இந் நாட்டுக் கலைஞர்கள் மதித் திருப்பார்கள்; மனதில் என்றுமே ஞாபகம் வைத்திருப்பார்கள்.

மாறாக, இன்று இவர்களை வருவான வரித் திணைக் களமல்லவா ஞாபகத்தில் வைத்திருக்கப் போகின்றது!

பொதுவான திட்டத்திற்கு நாம் நமது மகிழ்ச்சியையும் வர வேற்பையும் அளிக்கும் இவ் வேளையில், ஈழத்துக் கலை இலக்கி யங்களை நேசிக்கும் சஞ்சிகை என்ற எண்ணத்துடன் மாத்திரமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தில் நமது தனித்துவமான கலை, இலக்கியங்களைப் போஷித்துப் பாதுகாக்க வேண்டும் எனத் தனியாகத் தனியே நின்று போராடி வந்துள்ள சஞ்சிகை என்ற தனிப் பெருமையுள்ள நாம், ஒருமுக்கிய அம்சத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

சஞ்சிகைகள் வெளியிடும் பத்திரிகைத் தாள்கள் 20 சதவீதம் விலையேறிவிட்டன. பணத் தாள்களுக்கு அடி விழப்போய், நம்மைப் போன்றவர்கள் நடத்தும் சஞ்சிகைத் தாள்களுககும் அடி விழுந்துவிட்டது.

அடுத்து சஞ்சிகைகள் இதுகால வரையும் பதிவுரிமை பெற்று, ஐந்து சத முத்திரையுடன் சந்தாதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தன, இலக்கியச் சஞ்சிகைகளின் உயிர் நாடியே சந்தாதாரர்கள்தான்! விற்பனையை நம்பி மாத்திரம் இந்த மண்ணில் ஓர் இலக்கிய சஞ்சிகையை நிரந்தரமாக நடத்திவிட முடியாது என்பதை, நாலும் அறிந்தவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இனிமேல் பத்துச்சத முத்திரை ஒட்டப்பட வேண்டும். அத்துடன் அச்சடிக்கும் மை போன்ற உப பொருட்களும் புதிய திட்டத்தினுல் விலையேறி விட்டன.

வழக்கமாகவே சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவர்கள் நட்டத்தில்தான் சில்லெடுக்கிறார்கள். இது பகிரங்க உண்மை. இருந்தும் ஏன் காலங் காலமாக இதனுடன் மாரடிக்கிறார்கள் என்றால் இந்தத் துறையின் மேல் ஏற்பட்டு விட்ட ஆர்வம் - வேறு பாஷையில் சொன்னால் ஒரு மோக வெறி - தான் காரணம். எந்தச் சிரமத்தையும் தாங்கி இந்தத் துறையில் போராடி முன்னேறத் துடிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, மலையகம் போன்ற பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் பல இலக்கிய சஞ்சிகைகள் ஆர்வம், உழைப்பு ஆகியவைகளையே அடிப்படை மூலதனமாகக் கொண்டு இது காலவரையும் இயங்கி வந்துள்ளன.

இத் திட்டத்தினுல் நட்டப்பட்டு வந்தவர்கள் இனிமேல் கூடிய நட்டமடையப் போகின்றனர். சிலர் சஞ்சிகைகளையே நிறுத்திவிடக் கூடும்.

'பிரதேச பத்திரிகைகளுக்கும் ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகளுக்கும் நாம் தகுந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும் செய்து தருவோம்!' எனச் சமீப காலமாக நமது அமைச்சர்கள் பல கூட்டங்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி தந்து வந்தனர்.

நாமும் எத்தனையோ சிரமங்கள் நம்மை எதிர்நோக்கி வந்த போதிலும் கூட, துணிந்து அவற்றைச் சமாளித்து. பரம நம்பிக்கையுடன் சஞ்சிகைகளைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளோம்.

ஆனுல் இன்று நமது உயிர்க் குருத்தையே கிள்ளியெறியும் ஒரு சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

ஷேக்ஸ்பியரின் ஒரு பாத்திரம் ஓர் இடத்தில் சொல்வது போல 'நாம் இருப்பதா அல்லது இறப்பதா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஸ்தாபன பலமும் பண மூலதனமும் கொண்ட சஞ்சிகைகளல்ல. ஏகபோக சக்திகளுமல்ல. பணம் பண்ணும் வித்தையாகப் பத்திரிகைத் தொழிலைக் கைக் கொண்டவர்களுமல்ல. ஆனால் அவர்களது பத்திரிகைகளுக்குரிய அதே சட்டம் எம்மீதும் திணிக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணி ஆட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் மற்றவர்களைவிட, எழுத்தாளர்களாகிய, கலைஞர்களாகிய நாம் அதிக மகிழ்ச்சி அடைந்து வரவேற்றோம். காரணம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'தாம் ஆட்சியைக் கைப்பற்றினல் தேசிய கலை கலாச்சாரம் செழித்து வளரத்தக்க நடவடிக்கைகள் அனைத்தும் எடுப்போம்' என முன்னரே ஒப்புக் கொண்டுள்ளனர் இவர்கள்.

ஆனல் இதுவரையும் இச்சஞ்சிகைகளுக்கு ஒரு விளம்பரம் - ஒரேயொரு விளம்பரம் - கூடத் தந்துதவவில்லை.

நமது இந்த விமர்சனம் சகோதர விமர்சனம். இதைத் தவருகப் புரிந்து கொண்டு சில பிற்போக்குக் கும்பல்களும் சந்தர்ப்பவாதிகளும் சமீபத்தில் சட்டை மாற்றிக் கொண்டுள்ளவர்களுமான ஒரு சிலர் கூக்குரல் எழுப்பக் கூடும். துணிந்து அவர்களது சுயரூபத்தை அம்பலப்படுத்துவோம்.

நமது முரண்பாடு சிநேக முரண்பாடு.

நிச்சயம் சிறு சிறு குறைகள் பரஸ்பரம் புரிந்து கொண்டு தீர்க்கப்பட்டு விடும் என்பதை நாம் மனப்பூர்வமாக நம்பும் இவ் வேளையில், நமது கோரிக்கையைத் தமக்குச் சாதகமாகக் காட்டி இந்த நாட்டு ஏகபோகப் பத்திரிகைக் கூட்டம் சலுகைகள் கோருவதையும் நாம் அனுமதிக்கத் தயாராக இல்லை.

பிரதேசப் பத்திரிகைகளையும் இலக்கிய சஞ்சிகைகளையும் நாம் வளர்த்தால்தான் ஏகபோகத்தைத் தகர்க்க முடியும்; சாக்கடை இலக்கிய இறக்குமதிக்கு எதிராக மக்களைத் திரட்ட முடியும். அத்துடன் சோஷலிஸ ஜனநாயகக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் முடியும்.

ஆகவே, ஈழத்துக் கலை, இலக்கிய வளர்ச்சிக்காக தம்மைத் தாமே அர்ப்பணித்து வரும் சஞ்சிகைகளுக்கு ஆக்க பூர்வமான உதவிகளைச் செய்து தருவது முற்போக்கு அரசாங்கத்தின் முக்கிய கடமை என்பதை நினைவூட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின்
# 'இந்தியா' கண்டுபிடிப்பு

இளசை மணியன்

இந்தியா தேசம் எங்குள்ளது? ஆப்பிரிக்காவில் உள்ளது என்று மறுமொழி அளிக்கக் கூடிய ஆத்மாக்களும் உள்ளனர். அந்நிலையில், மகாகவி பாரதியார் இன்றைக்குக் கிட்டத்தட்ட, சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் நடத்திய பத்திரிகையைக் கல்கத்தா தேசிய நூலகத்தில் தேடவேண்டுமென்றால் லேசான விஷயமா? விவரம் தெரிந்தவுடன் ஆர்வமிகுதியினால் உடன் கல்கத்தா தேசிய நூலகத்திற்கு எழுதினேன். பதிலில்லை; மறுபடியும் எழுதினேன் பதில் இல்லை; மறுபடியும்...... மறுபடியும்...... மறுபடியும்...... எழுதிக்கொண்டே இருந்தேன் பதில் இல்லை. ஒரு வருஷம் ஓடிவிட்டது. சோர்ந்து உட்கார்ந்துவிட்டேன். இதற்கிடையில் கல்கத்தா சென்று வந்தவர்களெல்லாம் பாரதியின் 'இந்தியா' பத்திரிகை இருக்கிறது... தேசிய நூலகத்தில் இருக்கிறது என்று கூறிக்கொண்டே இருந்தார்கள். எனக்கும் பெரிய சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. என்னது இது மூக்கரையான் கதைபோல்தானோ? என்று எண்ணிக்கொண்டேன்;

இதன்பின் 2 ஆண்டுகள் கழித்து. சந்தேகம் நீங்க, முழு விவரத்தையும் எழுதி இந்தியப் பாராளுமன்ற மக்களவையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குழுவின் துணைத் தலைவரான பேராசிரியர் ஹிரேன் முகர்ஜிக்கு தெரியப்படுத்தி, வங்க எழுத்தாளர்களை இது விஷயத்தில் உதவி புரியுமாறு கேட்டேன். அவர் இரண்டு எழுத்தாளர்களை அறிமுகம் செய்துவைத்தார். அதில் ஒருவர், சின்மோஹன் செஹனோவிஸ், தேசிய நூலகத்திற்குச் சென்று விவரங்கள் சேகரித்து அனுப்பினார். அது மட்டுமின்றி என்னைக் கல்கத்தாவுக்கு வந்து, 'இந்தியா'வைப் பிரதி செய்து கொள்ளுங்கள். அதற்கு வேண்டிய வசதி செய்து தருகிறேன் என எழுதியிருந்தார். ஒருமட்டும் சந்தோஷம். சரி பத்திரிகை இருக்கு என்று முடிவு கட்டிக் கொண்டேன். ஆனால் ஒருபுறம் வருத்தம், உடன் கல்கத்தா செல்ல பொருளாதார வசதியில்லையென்று நொந்து கொண்டேன். இரண்டாவது வருஷம் உருண்டோடிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்பு, கல்கத்தா தேசிய நூலகத்திலுள்ள பாரதியின் பத்திரிகைத் தொகுப்பை பிரதி செய்து எனக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு அன்றைய இந்தியக் கல்வி அமைச்சர் திரு. திரிகுணசென் அவர்களுக்கு எழுதினேன். அப்பாடா, ஒருமட்டிலும் கல்கத்தா தேசிய நூலகத்திலிருந்து பதில் வந்தது. ஆனால் பதில் மகிழ்ச்சியளிக்கவில்லை. காரணம், பத்திரிகைத் தொகுப்பைத் தபாலில் அனுப்ப இயலாதென்றும், மைக்ரோ பிலிம் எடுத்து அனுப்பத் தயாராக இருப்பதாகவும் பதிலில் நூலகத்தார் குறிப்பிட்டிருந்தார்கள் மைக்ரோ பிலிம் எடுக்கக் கிட்டத்தட்ட ரூபா 600- வரை செலவு ஆகுமென்று கூறியிருந்தார்கள். சோர்வுமட்டிலும் ஏற்படவில்லை; அப்படியே சுருண்டு விட்டேன்.

இதற்கிடையில் மத்திய கல்வி அமைச்சராக திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் பதவியேற்றுர்கள். மிக விரிவான கடிதமெழுதினேன். அதில், தேசிய கவிஞனை பாரதியின் படைப்புக்களை வெளிக்கொணரும் என் முயற்சிக்கு அரசு உதவி புரியவேண்டுமென்றும், 'இந்தியா' மைக்ரோ பீலிமை எனக்கு அரசாங்கச் செலவிலேயே எடுத்து அனுப்ப வேண்டுமென்றும் கேட்டிருந்தேன்! கடிதமெழுதி மூன்று மாதங்கள் கழித்து திரு. ராவிடமிருந்து மிகவும் மகிழ்ச்சிகரமான கடிதம் எனக்கு வந்தது. அதில், கல்கத்தா தேசிய நூலகம் 'இந்தியா' பத்திரிகையை மைக்ரோபிலிமில் எடுத்துக்கொண்டு இருக்கிருர்கள். விரைவில் உங்களுக்கு வந்து சேருமென்று எழுதியிருந்தார்: என் மனம் ஆனந்தக் கூத்தாடியது. பாரதி சேவை செய்ய தக்கதருணம் வந்தது குறித்து மிகவும் அகமழ்ந்தேன். கடிதம் வந்த ஒரு மாதத்திற்குள் மைக்ரோ பிலிம் எனக்கு வந்து சேர்ந்தது.

**பாரதியின் 'இந்தியா' பத்திரிகை பற்றி:**

1906-ம் ஆண்டு பாரதி 'இந்தியா' பத்திரிகையில் போய்ச் சேர்ந்தார். கிட்டத்தட்ட அவரே அதற்கு ஆசிரியரென்று கூறலாம். என்னிடம் மைக்ரோ பிலிமிலுள்ளவை 1906 ஜுலையிலிருந்து 1907 ஜுலைவரை உள்ள இதழ்களேயாகும். இந்திய தேசிய இயக்கம் விரிந்து விகசித்து பரவிய காலத்தில் நடைபெற்ற இப்பத்திரிகையில் பல மிக முக்கியமான விவரங்கள் அடங்கி உள்ளன. பத்திரிகையில், தலையங்கம், சிறப்புக் கட்டுரைகள், வாரவர்த்தமானங்கள், ராய்டர் தந்திகள் ஆகியன 'இந்தியா' வில் இடம் பெற்றுள்ளன. அன்றைய தினம் வங்கத்தில் கொதித்தெழுந்த விடுதலைப் போராட்டத்தின் விவரங்கள் முழுவதையும் பற்றி பாரதி இப்பத்திரிகையில் எழுதியுள்ளான். அதுமட்டுமல்லாமல், தேசியக் கல்வி, தேசிய ஒருமைப்பாடு, சங்கீதம் இப்படிப் பல விஷயங்களைப்பற்றியும் பரக்கப் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளான். இதில் மிகவும் மகிழ்ச்சிதரக்கூடிய விஷயம் என்னவென்றால், ருஷ்ய கொடுங்கோலன் ஜாரை எதிர்த்து நடந்த வீரமிக்க போராட்டங்களைப் பற்றி விரிவான கட்டுரைகள் உள்ளன. கிட்டத்தட்ட 1906ம் ஆண்டு மத்தியிலிருந்து பாரதி ருஷ்ய விவகாரங்கள் பற்றி அநேக கட்டுரைகள் எழுதியிருப்பதுடன், 'இந்தியா'வில் அந்நாட்டின் விடுதலைப் போரைப் பற்றிய ராய்டர் செய்திகளையும் வெளியிட்டுள்ளார். மகாகவி பாரதி முதன் முதலாக நவம்பர் புரட்சி துவங்குவதற்கு முன்பிருந்தே, தான் தேசிய இயக்கத்தில் பங்கு கொண்ட நேரத்திலிருந்து, ருஷ்யாவின் நடவடிக்கைகளைப்பற்றி எழுதியதுபோல் இந்தியாவில் வேறெந்த எழுத்தாளரும் எழுதியிருக்க முடியாதென்றே எண்ணுகிறேன். இப்படி பல அரிய விவரங்கள் உள்ளன. 'இந்தியா'வில் உள்ள விஷயங்கள் பற்றி இங்கு விஸ்தாரமாகக் கூறுவது இயலாத காரியம். நூல் விரைவில் வந்துவிடும்.

அநேகமாக, முக்கால்வாசிக்குமேல் பிரதியெடுத்துவிட்டேன். ஒவ்வொரு ஆண்டாக பிரித்து, முதலில் 1906 'இந்தியா' கட்டுரைகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளேன். அதன்பின் ஒன்றன்பின் ஒன்ருக வெளியிட வேண்டும். என்னிடம் உள்ள 'இந்தியா' கட்டுரைகள் அநேகமாக இதுவரை நூல் வடிவில் வெளியிடப்படவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**சோவியத் ருஷ்யாவைப்பற்றி பாரதி கூறியதும், ருஷ்ய எழுத்தாளரின் வியப்பும், ஆர்வமும்.**

மாபெரும் அக்டோபர்புரட்சியின் 50-வது ஆண்டு விழாவையொட்டி 'சாந்தி' 'ஜனசக்தி' பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுத, டில்லி நகரிலுள்ள சோவியத் தூதரகத்திற்கு சில விவரங்கள் கேட்டு எழுதினேன். அதாவது, ருஷ்ய புரட்சியும் இந்திய விடுதலை இயக்கமும் என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுத சில விவரங்கள் கேட்டிருந்தேன். இதற்கு டில்லி சோவியத் தகவல் அதிகாரி திரு. எல். வி. மித்ரோகின் (இவர் ஒரு பத்திரிகையாளர், எழுத்தாளர்) தமிழ் நாட்டின் மார்க்சிஸ்ட் அறிஞர் ம. சிங்காரவேலர் பற்றியும், பாரதி ருஷ்யப் புரட்சிபற்றிக் கூறிய விவரங்களையும் தொகுத்து (ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து) அனுப்பக் கோரினுர். நானும் அனுப்பி வைத்தேன்.

பாரதி ருஷ்யப் புரட்சிபற்றிக்கூறிய விவரங்களைப் படித்து அவர் மிகவும் வியந்து எனக்கு கடிதம் எழுதினுர். அதில் மிகவும் ரஸமான விஷயம் என்னவென்ருல், ருஷ்யாவில் அரசாங்கம் அமைத்த விவரத்தைத் தெரிவிக்க வந்த பாரதி, ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் மின்த்ரோஸ்கி தலைமையில் ருஷ்யாவில் அரசாங்கம் அமைக்கப்பட்டது என்று கூறியுள்ளான். அது மட்டுமல்லாமல், புரட்சிக்குப் பின் லாரின் என்பவர் தலைமையில் சோவியத் யூனியனில் ஒரு கமிட்டி போடப்பட்டிருந்தது. (அதுபற்றிய விவரம் பாரதி தமிழில் காண்க) ஆக திரு. மித்ரோகின்னுக்கு இந்த மின்த்ரோத்ஸ்கி, லாரின் என்போர் யாரென்ற விஷயத்தில் சந்தேகம் ஏற்பட்டது. இறுதியில் அவர் தீவிரமாக இது பற்றி ஆலோசனைகள் செய்து, பல நூல்களை ஆதாரமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்த்ரோத்ஸ்கி டிராஸ்கியாக இருக்கலாமென்ருர். (இன்னும் லாரிஃனப்பற்றிய விவரம் தெரியவில்லே. ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருர் நான் தொகுத்துக் கொடுத்த கட்டுரைகளின் சில பகுதிகளே அவர் எழுதிய 'மனிதருள் மாமேரு' (லெனினைப்பற்றி இந்தியாவில் வெளிவந்தவைகளைப் பற்றிய குறிப்புகள் இந் நூலில் வெளிவந்துள்ளன) என்ற புத்தகத்தில் கையாண்டுள்ளார். இவருக்கு நான் பாரதியாரின் 'ருஷ்யா' கட்டுரைகளே மொழிபெயர்த்துக் கொடுத்ததால், எனக்கும் இலக்கிய ரீதியில் ஆதாயமுண்டு அதாவது, எனது மொழிபெயர்ப்புக் கட்டுரைகளைப் படித்த டில்லி புத்தக வெளியீட்டாளர் ஒருவர், 'பாரதியும் ருஷ்யப் புரட்சியும்' என்ற தலேப்பில் சிறு நூலொன்று ஆங்கிலத்தில் எழுதுப்படி என்னைக் கேட்டுக் கொண்டார். அப்பணி முடியும் தறுவாயில் உள்ளது. விரைவில் வெளிவரலாம்.

இன்றையதினம் நான் செய்யும் இலக்கியப் பணி.

மகாகவி பாரதிக்கு சேவை செய்யும் பெரும் பாக்கியம் எனக்குக் கிட்டியுள்ளது. இன்னும் வெளிவராத பாரதியின் எழுத்தோவியங்களே வெளிக் கொணர முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறேன். அத்துடன், பாரதியின் கவிதைகள், கட்டுரைகளே அனைத்து இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து பிரசுரிக்க வேண்டுமென்று சாஹித்திய அகாடமியுடன் பெரும் 'பாரதப் போர்' துவங்கியுள்ளேன். ஆங்கிலத்தில், பாரதியின் கவிதைகளே மொழிபெயர்க்க, இந்தியாவிலுள்ள யுனெஸ்கோ ஸ்தாபனம் என்னிடம் சில விவரங்களைக் கேட்டுள்ளது. அதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறேன். இம்முயற்சிகளிலெல்லாம் எனக்கு வெற்றிகிட்டுமென்று நம்புகின்றேன்.

இதனிடையே இந்தியா விடுதலே அடைந்தபின்பு, தமிழகத்தின் சமூக, பண்பாட்டுத் துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனல், அம்மாற்றங்களினுல் நாட்டின் தனித்துவமும், உயர்ந்த நெறியும் பிறழ்ந்து கெட்டுக் குட்டிச் சுவராகும் நிலேயுள்ளது.

இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்களே நானும் கொஞ்சம் படித்துள்ளேன். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு இலங்கை எழுத்தாளர்கள் செய்யும் புனிதப் பணியை வார்த்தைகளால் விவரிக்கமுடியாது. இலங்கைவாழ் தமிழன்பர்களும், எழுத்தாளர்களும் என் முயற்சிக்கு பேராதரவும் வாழ்த்துதலும் நல்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை. கரு தவமணிதாசன்

# பாவலர்க்கேன் இக்கெதியோ?

பாவலர்கள் பணமின்றி
பட்டினியில் வாடுவராம்!
கேவலமாய் அவர்வாழ்வு
கெதியற்று இருந்திடுமாம்!
பாவலர்க்கும் பட்டினிக்கும்
பண்ணிவைத்த பிணைப்பெதுவோ?
காவலராம் தமிழுக்கு - இப்
பாவலர்க்கேன் இக்கெதியோ?

மன்னவனைப் பாடி
மணியாரம் பெற்றார்கள்;
இன்னும் பல பாடி
எத்தனையோ பெற்றார்கள்;
தன்மனதில் உதிக்கும்
எண்ணக் குவியல்களை,
இன்பமாய்ப் பாடும்
இவர்களுக்கேன் இக்கெதியோ?

புலவர்க்கு வறுமையுண்டாம்
புண்ணியம் இல்லையாமோ?
குலத்தின் பெருமைக்கு
குடும்பத்தில் செழிப்பில்லை!
பலர் முன்னே பாடி
பரிசாகப் பெற்றதெல்லாம்
கலயத்துக் கஞ்சிக்கு
கைமாறும் வாழ்வேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தல் துணி இடுப்பில்
கக்கத்தில் பழங்குடையும்
அந்தம் குலவவைக்கும்
அப்பாவலர்கள் பெரும் சொத்தும்
இந்த நிலைக்கு அவர்வாழ்வு
இழிவுற்று; இடர்பட்டால்
எந்நாளோ அவர்வாழ்வு
எழில் பெற்று உயர்ந்திடுமோ?

நாயகிக்குத் தூதாக
நாரையை அழைத்தவரும்
வேயாத வீடும்; வெறும்
வயிற்றின் வலிவோடே
தூய தமிழ்பாடும்; தங்கத்
தமிழ்ப் புலவன் எனில்
காயம் காயும் இச்
சருகு வாழ்வேனோ?

புலமையின் புகழ்பரப்பும்
புலவர்க்கு ஏனோமோ,
புலமையினால் உயர்ச்சியில்லை
புண்பட்ட இவ் வாழ்வு
புலமையினால் பூத்தெழுந்து
புனர் வாழ்வு பெறுதற்கு
புலமைக்குப் புலவுஇட்ட
புண்ணியனே! விடை பகர்வாய்.


மல்லிகை
ஆசிரியர்: டொமினிக் ஜீவா

கலை இலக்கிய மாத இதழ்
60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மல்லிகை நாலாவது ஆண்டு மலர் சொற்பப் பிரதிகளேஇருக்கின்றன அத்தியா வசியமாகத் தேவைப் பட்டவர்கள் பெற்றுக் கொள்ளலாம் ஏனைய பிரதிகளும் தேவையானோர் விவரமாக எழுதினால் பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

- ஆசிரியர்

# தமிழ்ச் சஞ்சிகைகள்

இறக்குமதி பற்றிய

# கலந்துரையாடல்

நெல்லை க. பேரன்

கடந்த மாத இறுதிப் பகுதியில் கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகம் தனது மாதக் கூட்டத்தைக் கூட்டி, 'தமிழ்ச் சஞ்சிகைகள் இறக்குமதி' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சியினை நடாத்தியது. திருவாளர்கள் மு. கனகராசன், குப்பிழான் ஐ. சண்முகன், ஐ. சாந்தன், நெல்லை க. பேரன், அ. யேசுராசா; வன்னியகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

திரு. கனகராசன் பேசுகையில், 'இறக்குமதியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளைத் தடைசெய்ய வேண்டும் என்பது ஏற்கனவே பெரும்பாலான எழுத்தாளர்களாலும் தரமான வாசகர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும். தமிழகத்தில் வெளியாகும் சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் தனிரகம். ஆனால் ஈழத்தில் அனேகமாக கலை, இலக்கியப் பத்திரிகைகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. இலட்சியப் பத்திரிகைகளுக்கு இங்கு கஷ்டம் அதிகம். விளம்பரம் கொடுக்கும் ஸ்தாபனங்களின் ஆதரவு குறைவு. அரசாங்கம் விளம்பரம் கொடுக்கவேண்டுமென்றால் அதற்கும் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சாக வேண்டும். அப்படியானால் வாசகர்கள் தொகையைப் பெருக்கவேண்டும். தமிழகத்து ஆனந்தவிகடன், கல்கி போன்ற பெரிய ஸ்தாபனங்களுடன் போட்டி போடக்கூடிய அளவிற்கு எழுத்தாளர்களாகிய எம்மால் பத்திரிகை நடத்த முடியுமா? என்பது பிரச்சனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் படைத்த முதலாளிக ளின் ஆதரவு எமது சஞ்சிகை களுக்கு நிச்சயம் தேவை. ஒரு வாசகனுடைய அடிப்படை உரி மைகளை எம்மால் மறுக்க முடி யாது. உள்நாட்டுச் சஞ்சிகை களை வளர்ப்பதற்கான வழி முறைகளை ஆராய்ந்து அதைச் செயலில் காண்பிக்க நாம் முயல வேண்டும்' என்றார்.

குப்பிழான் ஐ. சண்முகன் பேசுகையில் 'தரமற்ற தமிழ கத்துச் சஞ்சிகைகளைத் தடை செய்ய வேண்டும் என்ற பிரச் சனை ஏன் தோன்றியது என் பதை நாம் ஆராயவேண்டும். இந்த நாட்டில் தேசப்பற்றும் கலை, கலாசார முனைப்புகளும் தனித்துவமும் பிறநாட்டுப் பத் திரிகைகளால் மழுங்கடிக்கப் படுகின்றனவே என்ற ஏக்கத்தி னுல் உண்மையான தேசிய உணர்வு கொண்ட 'டொமினிக் ஜீவா' போன்ற எழுத்தாளர் களால் பல ஆண்டுகளுக்கு முன் னர் ஆரம்பிக்கப்பட்ட இப் பிரச்சனை இன்று ஈழம் முழுவ தும் முக்கியமான பிரச்சனையா கப் பொதுமக்கள் மத்தியிலும் பத்திரிகைகளிலும் அடிபடுவ தைக் காணமுடிகிறது. இது ஒன்றே எமது இலக்கிய காரர் களின் சிந்தனை ஒருபடி முன்னே றிவிட்டது என்பதனைக் காட்டு கின்றது. அரசாங்கம் இப் பிரச் சனைக்குத் தீர்வு காணும்படி மக்களைக் கேட்டிருக்கக்கூடாது. எழுத்தாளர்கள்தான் பத்திரி கைக் கட்டுப்பாடு பற்றிப் பதில் சொல்லத் தகுதி வாய்ந்தவர் கள்' என்றார்.

திரு. அ. யேசுராசா பேசு கையில், 'இங்கு இறக்குமதியா கும் துப்பறியும் புத்தகங்களும் தடை செய்யப்பட வேண்டும்' என்றார். 'பார்வை' என்ற சிறு கதைத் தொகுப்பின் ஆசிரியர் திரு. ஐ. சாந்தன் பேசுகையில், 'சஞ்சிகைகள் இறக்குமதி பற் றிய முடிவெடுக்க வாசகர்களுக் குத்தான் உரிமை அதிகம் உண் டே தவிர எழுத்தாளர்களுக்கல்ல மற்றவர்கள் விரும்பாததை அவர்கள் தொண்டைக்குள் திணிக்க முடியுமா?' என்று கேட் டார். இவர் சண்முகத்தின் கருத்துக்களுடன் நேரடியாக முரண்பட்டார். ஆனாலும் ஈழத்து இலக்கியம் வளரவேண் டும் என்பதில் அக்கறை கொண் டுள்ளதாகத் தெரிவித்தார்.

திரு. ஸ்ரீதரசர்மா பேசு கையில்' 'உலகின் எந்த மூலை யிலிருந்து வந்தாலும் சரி தர மற்ற இலக்கியங்கள் தடைசெய் யப்பட வேண்டும்' என்றார். நெல்லை க. பேரன் பேசுகையில், 'தரமற்ற வெளிநாட்டுச் சஞ்சி கைகளைக் கட்டுப்படுத்துங்கள். என்ற கோரிக்கை எழுந்த பின் னர் தான், ஈழத்து வாசகர்கள் மத்தியில் ஈழத்து எழுத்தாளர் களின் படைப்புக்களையும் வாசி க்க வேண்டும் என்ற ஆர்வம் கூடுதலாக எழுந்துள்ளது ஈழத் தில் தரமான இலக்கியங்கள் இருக் கின்றன என்பதை இப்போது பலர் ஒப்புக் கொண்டுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தேசிய இலக்கியங்களை வளர்ப்பதிலும் எமது எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் பலர் ஆதரவுதந்து முன்னிற்கிருர்கள்' என்ருர்.

திரு. வன்னியகுலம் பேசுகையில், 'ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை மக்கள் அதிகமாக வாங்கவேண்டும். மக்களுடைய ஆதரவு இல்லாமல் இலக்கியம் வளரமுடியாது' என்ருர்.

சஞ்சிகைகள் இறக்குமதித் தடைபற்றி யாழ் இலக்கிய நண்பர் கழகம் கௌரவ தபால் அமைச்சருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்த தீர்மானங்களும் அறிக்கையும் இக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன. கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகமும் தனது தீர்மானத்தை அனுப்பி வைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

யாழ் இலக்கிய நண்பர் கழகச் செயலாளர் திரு. க. மயில்வாகனம், திரு. அண்ணு இராசேந்திரம் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

பெரும்பான்மை உறுப்பினர்கள் மத்தியில் தரமற்ற தமிழக சஞ்சிகைகள் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தே நிலவியது. எமது தனித்துவத்திற்கு எதிரான கலை, இலக்கியங்களை எதிர்த்துப் போராடும் பாதையில் இவர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு நிச்சயமாக மகிழ்ச்சியைத் தரும் என நம்பலாம்.

ஆச்சரியம் ஆனுல் உண்மை!

இன்றையப் பிரபல எழுத்தாளர்கள் யார் என்பதை நீங்கள் ஒருமுறை எண்ணிப் பார்த்தீர்களானுல் நிச்சயமாக அலறவே செய்வீர்கள்.

அப்படி அலறுவிட்டால் நீங்கள் எழுத்தாளராகவோ வாசகராகவோ இருக்கமுடியாது.

இன்று பிரபலமான எழுத்தாளர் யார்?

எம். ஜீ. ஆர்.

அதற்கப்புறம்

ஜெயலலிதா!

'வாசவன்' தீபம் சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலில் சந்தித்தேன்

இர. சந்திரசேகரன்

மல்லிகையின் அட்டையில் காட்சியளிப்பவர் திரு. ஆ. குருசுவாமி அவர்கள். பழம் பெரும் எழுத்தாளரான இவர் ஈழத்து எழுத்தாளர்களை இலக்கியமும் சுவையும்போல நேசிப்பதில் தனித்து நிற்பவர்.

பழகுவதில் தனக்கென ஒரு தனி இலக்கணத்தைக் கையாள்வதில் வல்லவர்: பழகுபவர்களினால் என்றுமே மறக்கப்பட முடியாதவர்.

'டி. கே. சி. வீட்டுத் தோசை' என தமிழக இலக்கியப் பேச்சுக்களில் சொல்லப்படுவதுண்டு, இவர் வீட்டுத் தோசையைச் சாப்பிட்டவர்கள் நிச்சயம் அதையும் ஒரு இலக்கிய அந்தஸ்திற்கு ஏற்ற மறுக்க மாட்டார்கள்.

- ஆசிரியர்.

ஓராண்டுக்கு முன்னர் ஒரு நாள் முற்பகல் நேரம். நண்பர் டொமினிக் ஜீவாவும் நானும் புறக்கோட்டை மெலிபன் தெருவில் நடந்துகொண்டிருக்கிறோம். 137-ம் எண் கொண்ட கடையினுள் நாங்கள் நுழைகிறோம். அங்கே மனேஜர் ஆசனத்தில் இருந்தவரை, 'இவர் தான் குருஸ்வாமி' என நண்பர் எனக்கு அறிமுகஞ் செய்துவைக்கிறார். என்னையும் அவருக்கு அறிமுகஞ் செய்கிறார். அவர் இருகரங் கூப்பி எங்களை வரவேற்கிறார். கம்பீரமான தோற்றம், நேர் கொண்ட பார்வை! இவற்றோடு அவரின் அட்சர சுத்தமான பேச்சு என்னை முதலில் ஈர்த்தது. அவர் பேசும்போது சொற்கள் அழகுபெறுவதை நான் கவனிக்கிறேன். அண்மையில் வெளிவந்த இலக்கிய இதழ் பற்றியும் புதுமைப்பித்தன் பற்றியும் அவர் எங்களோடு உரையாடுகிறார், பார்த்த மாத்திரத்தில் பலகாலம் பழகியதுபோன்ற ஒரு நட்புரிமை.

திரு. ஆ. குருஸ்வாமி அவர்களைப்பற்றி நான் சிறிதுகேள்விப் பட்டிருக்கிறேன். அன்றுதான் முதன் முதலில் சந்தித்தேன். அதன் பின்னரும் பலமுறை சந்தித்திருக்கிறேன். பல மணி நேரம் இன்றைய இலக்கியம் பற்றி உரையாடியிருக்கிறேன்: அவர் இலக்கியம்பற்றிப் பேசத் தொடங்கினால் நேரம்போவதே தெரியாது. உரையாடலில் அவர் வல்லுநர். மிக இனிமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உரையாடலைக் கொண்டு செல்வார். அண்மையில் டொமினிக் ஜீவா, மு. தளையசிங்கம், மு.பொன்னம்பலம், செம்பியன் செல்வன், எஸ். எம். பஷீர் ஆகியோரோடு ஒருநாள் மாலை அவர் இல்லத்தில் நடந்த இலக்கிய உரையாடலைக் கவனித்த போது, உரையாடற் கலையில் இவர் இணையற்றவர் என்பதை உணர்ந்தேன். பலகோணங்களிலிருந்து எழுந்தகருத்துக்களையும் கேட்டு அவற்றை ஒட்டிய தன் கருத்தையோ அல்லது எதிர்க் கருத்தையோ அவர் சொல்லும் போது அவரின் உச்சரிப்புமிக்க சொற்கள் அவருக்குத் துணை நிற்கின்றன. நேரிலேமாத்திரமல்ல டெலிபோனிலும் அவர் உரையாடல் தனிச்சிறப்புடையது. நேரிலே இருந்து பேசுவது போல் அவர் அந்த உரையாடலை ஆக்கிவிடுவார். நகைச் சுவை நிறைந்த உரையாடலாக அது அமைந்துவிடும்.

குருஸ்வாமி அவர்கள் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர். இப்போது அவர் ஏனோ எழுதுவதில்லை! இலக்கிய சம்பந்தமாக வரும் கடிதங்களை இவர் சேகரித்து வைத்திருக்கிறார்.

1944-ல் இருந்தே இலங்கை வானொலியில் இவருக்குக் கணிசமான பங்கு இருந்திருக்கிறது. வானொலியில் இவரின் முதற் பேச்சு 'பாரதியின் வசனங்கள்' என அமைந்தது. அதன் பின்னர் கட்டுரைகள் பல எழுதி வாசித்திருக்கிறார். வானொலி நாடகத்துறையில் குருஸ்வாமி அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. நாற்பதுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதித் தயாரித்து நடித்துமிருக்கிறார். நாடகப் போட்டி ஒன்றில் இவரது 'சீதனம்' என்ற நாடகமும் பரிசுபெற்றது. பாஞ்சாலி சபதத்தை ஒருமணிநேர நாடகமாக்கினார். இந்த நாடகத்தில் இவரோடு அப்போது வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த சோ. சிவபாதசுந்தரம், கிராம நிகழ்ச்சி அதிகாரியாகவிருந்த வி. என். பாலசுப்பிரமணியம், நாடக நிகழ்ச்சி அதிகாரி சானா, சோ. சிவபாதசுந்தரத்தின் துணைவியார் (இவர் மிகுந்த கலை ஈடுபாடுடையவர் வீணை வாசிப்பதில் சிறந்தவர்) எம். எஸ். இரத்தினம். வி. கே. சுந்தரலிங்கம் ஆகியோர் நடித்தனர். இவ்வளவு கலையார்வம் இவர்களிடம் இருந்தது. இந் நிகழ்ச்சி பலராலும் பாராட்டப் பட்டது. திருச்சி வானொலி நிலைய அன்பர்கள் தனிப்பட்ட முறையில் குருஸ்வாமி அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்திருந்தார்கள்.

நாடகத்தை ஓர்இரவிலேயே உட்கார்ந்து எழுதி முடித்துக் கொடுத்துவிடுகிற ஆற்றலும் ஆர்வமும் அப்போது இவரிடம் இருந்தன. 1951 தொடக்கம் வானொலியிலிருந்து ஒதுங்கியிருந்தார். 1963-ல் இருந்து 1969 வரை குருஸ்வாமி அவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் வானொலியில் ஈடுபட வைத்தவர்களில் முக்கியமானவர் திரு. சி. வி. ராசசுந்தரம். கம்பராமாயண சம்பந்தமான சித்திரங்கள் மற்றும் நிகழ்ச்சிச் சித்திரங்கள் கருத்தரங்குகள் போன்றவற்றில் இவர் பங்கு பற்றி நடத்தியிருக்கிறார். வானொலியில் இலங்கையின் சிறந்த 'நரேட்டர்' ஆக விளங்கியவர். வானொலிக் கருத்தரங்குகளில் இவர் குரல் கணீரென்று ஒலிக்கும். இப்போதெல்லாம் ஏனோ அவர் குரல் வானொலியில் கேட்பதில்லை; நண்பர்கள் மத்தியில் தான் ஒலிக்கிறது.

1944ல் 'இலக்கிய நண்பர் கழகம்' என்ற ஓர் அமைப்பை கொழும்பில் ஆரம்பித்து நண்பர்களின் இலக்கியக் கருத்துப் பரிமாறல்களுக்குக் களம் அமைத்தவர். இக் கழகத்தில் சோ. சிவபாதசுந்தரம், சி. வைத்திய லிங்கம், எம். எஸ். இரத்தினம் வி. என். பாலசுப்பிரமணியம், சாணு போன்றோர் அங்கம் வகித்தனர்.

குருஸ்வாமி அவர்கள் நிதிக் குழுச் செயலாளராகவிருந்து 1951ல் புதுமைப்பித்தன் நிதிக்கு ரூபா 3310 திரட்டிக்கொடுத்தார். 'சக்தி' ஆசிரியர் வை. கோவிந்தன் அப்போது தனாதிகாரியாக இருந்தார். இந்த நிதி திரட்டலைப் பாராட்டி, 'தமிழகம் ஈழத்தைப் பின்பற்றுக' எனத் தலையங்கமிட்டு ஒரு கட்டுரையைப் 'பிரசண்ட விகடன்' (1-8-51) எழுதியது. கு. ப. ரா இறந்தபோதும் இவ்வாறே பணம் திரட்டி உதவியிருக்கிறார்.

1944-ம் ஆண்டிற்குப் பின்னர் 'நேதாஜி வாலிபர் சங்கம்' என்ற இடதுசாரி மனோபாவமுடைய அரசியல் கட்சியை ஆரம்பித்தார். இயக்கத்திற்குக் கண்டி நாவலப்பிட்டி, கொட்டக்கல போன்ற இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டன. இலங்கை இந்தியக் காங்கிரஸிற்கு எதிராக இது ஆரம்பிக்கப்பட்டது. அதிக காலம் இது நீடிக்காவிட்டாலும் அதிக சாதனை புரிந்த இயக்கம் இதுவாகும். இளைஞர்களிடையே இடதுசாரி எண்ணங்களை இந்த 'நேதாஜி வாலிபர் சங்கம்' உண்டாக்கியது எனலாம்.

வ. உ. சி. பிறந்த இடமாகிய திருநெல்வேலியைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் குருஸ்வாமி அவர்களின் சொந்த ஊராகும். யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாலயத்திலும் இவர் படித்திருக்கிறார். எட்டயபுரம் பாரதி குழுவினருடன் தொடர்புடையவர். இவர் ஒரு 'மணிக்கொடி' ரசிகன். புதுமைப்பித்தனில் இரசனைமிக்கவர்; மிகுந்த ஈடுபாடுடையவர். தமிழக முற்போக்கு எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்புடையவர். அவர்கள் இங்குவந்தால் இவரோடு தங்காமலும் இலக்கியம்பற்றி உரையாடாமலும் போவதில்லை. அமரர் கு. அழகிரிசாமி இவரது நெருங்கிய நண்பராகவிருந்தவர் திரு. ரகுநாதன் சிறந்த நண்பர். ரகுநாதன் முன்னர் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது இவரோடு ஒரு மாதத்திற்குமேல் தங்கியிருந்த நினைவுகளை நினைத்துப்பார்த்து, 'அந்த நினைவுகளே ஓர் இலக்கிய விருந்தாகும்' என்பார்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் இந்திய அரசாங்கத்தின் கைதி வாரண்டை ஒட்டித் தலைமறைவாக இலங்கையில் கொஞ்சக்காலம் தங்கியிருந்த சமயம் அவருக்கும் குருஸ்வாமி அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. அனேகமாக மாலை வேளைகளில் ஜீவா இவரின் இடத்திற்கு வருவார். மிகவும் சுவைமிக்க இலக்கிய அரசியல் சர்ச்சைகள் நடக்குமிடமாக இவர்களிருக்குமிடம் மாறிவிடும் இந்த நினைவுகள்பற்றி ப. ஜீவானந்தம் அவர்களைப்பற்றியும் கேட்கும்போது குருஸ்வாமி அவர்களின் கண்கள் கலங்கி விடுகின்றன.

அவரிடம், 'நீங்கள் ஏன் உங்கள் எழுத்தைத் தொடரவில்லை? இப்போதெல்லாம் எழுதுவதில்லையே!' என்றுகேட்டால் 'ஒரு சிறந்த வாசகனாக மாறி விட்டேன் என்ற காரணத்தாலேயே எழுதுவதில் இப்போதெல்லாம் ஈடுபாடில்லை. சிறந்த வாசகன் என்பதிலேயே எனக்கு விருப்பமாக இருக்கிறது' என்று அவர் சொல்வார். உண்மை தான்! அவர் ஒரு சிறந்த வாசகர்தான். இன்றைய தரமான எல்லாப் பத்திரிகைகளையும் இதழ்களையும் நூல்களையும் அவர் வாசிக்கிறார். இவைபற்றி நண்பர்களோடு கலந்துரையாடநேரும்போது குருஸ்வாமி அவர்களின் தொனி பல புதிய கருத்துக்களோடு பல புதிய பார்வைகளையும் தோற்றுவித்துத் தனியாக ஒலிக்கும். நண்பர்களுக்கு இது பெரு விருந்தாகும்.

ஆழமான இலக்கிய ஞானமும் ஈழத்து இலக்கியம்பற்றிய தெளிவான பார்வையுமுடையவர். 'இந்தியாவில் எழுத்தின் அளவு கூடியிருக்கிறது. ஆனால் கனம் கூடவில்லை. ஈழத்தில் எழுத்தாளர் தொகையும் கூடி இருக்கிறது; கனமும் இருக்கிறது' என்று கூறுமிவர் 'ஈழத்துப் படைப்புகளில் கனமிருக்குமளவிற்குக் கலைத்தன்மையில்லை' என்றும் சொல்கிறார். இதைக் குறிப்பிடும்போது மு. தலையசிங்கம் அவர்களின் இதுசம்பந்தமான கருத்தோடு தனக்கு உடன்பாடு உண்டு என அவர் சொல்கிறார்.

1945-க்கு முன் நல்ல சிறுகதைகளை எழுதியவர்கள் என' கி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தர், இப்போது 'ஈழநாட்டில்' ஒதுங்கியிருக்கும் முருகானந்தன், சோ. சிவபாதசுந்தரம் போன்றோரை குறிப்பிடுகிறார்.

'மணிக்கொடியின்' பாதிப்பு ஈழத்திலும் ஏற்பட்டது. மறுமலர்ச்சி இலக்கிய கர்த்தாக்களை அது இங்கும் சிருஷ்டி செய்தது' என்று கருத்துத் தெரிவிக்கும் குருஸ்வாமி அவர்கள் 'யாழ்ப்பாணத்தில் அப்போது வரதர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் போன்ற இளைஞர்கள் முன்னணியில் நின்றார்கள்' என்றும் சொல்கிறார்.

'இக் காலகட்டத்தைத் தாண்டி, இருபத்தைந்து வருடத்திற்குப் பிறகு இப்போது இலங்கையில் இலக்கியத் தரம் அளவிலும் கனத்திலும் நிட்சயமாக முன்னேறி வளர்ந்திருக்கிறது' என்னும் கருத்துடைய குருஸ்வாமி அவர்கள் எஸ். பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, டானியல், செ. கணேசலிங்கன் போன்றோரும் குறைந்தவர்கள் அல்ல என்றும் குறிப்பிடுகிறார். அதிகமான வாசகரும் எழுதுவதற்கேற்ற களமும் கிடைத்தால் இவர்கள் இன்னும் சாதிப்பார்கள்என்பது இவரின் கருத்து.

'இலங்கையில் புதுமைப்பித்தனின் வாரிசுகள் இருக்கிறார்கள். 'கல்கி'யின் வாரிசுகள் இல்லை. வாசகர்களை உண்டாக்கியவர் தான் கல்கி' என்று அடிக்கடி சொல்லும் இவரது கருத்து எனக்கு மிகவும் பிடித்ததாகும்.

'வேளூர் கந்தசாமிக் கவிராயர் (புதுமைப்பித்தன்) கவிதையில்செய்த சித்துவேலைகளைத் திருச்சிற்றம்பலக் கவிராயராக ரகுநாதன் தொடர்ந்து செய்தார். அவர்களின் வாரிசாகத் தான்தோன்றிக்கவிராயர் என்ற சில்லையூர் செல்வராசன் பாராட்டத்தக்கசாதனைகளைக் கவிதைத் துறையில் செய்திருக்கிறார்' என்று கவிதைத்துறை பற்றிப் பேசத்தொடங்கும் குருஸ்வாமி அவர்கள், முருகையான், நீலாவணன், தமிழ்நாட்டிலுமில்லாத புதுமையாகக் 'குறும்பா' எழுதிய 'மஹாகவி', ஏ. இக்பால், மு. பொன்னம்பலம் போன்ற கவிஞர்களையும் குறிப்பிட்டார்.

புதுக்கவிதை பற்றி நல்ல கருத்துக்களையுடையவர் இவர். இதுபற்றிப் பேசும்போது இவர் அடிக்கடி சொல்லும் கருத்துக்களைக் கீழே தொகுத்துத் தருகிறேன்.

'புதுக்கவிதை தேவையா தேவையற்றதா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் புதுக்கவிதைகள் இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டன. மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் சிறுகதைகளைப் புதிய உத்திமுறைகளில் எழுதியபோது பலர் 'இது என்ன... தலையுமில்லாமல் காலுமில்லாமல்........?' என்று முணுமுணுத்தார்கள். காலக்கிரமத்தில் அந்த உத்திமுறைகளே ஒரு நியதியாகிவிட்டது. கவிதையைப் பொறுத்தவரை ஓசை நயத்துக்குக் கொடுத்து வந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தே ஆகவேண்டும்'.

புதுக்கவிதை முன்னோடியாகவுள்ள ந. பிச்சமூர்த்தி இருபது வருடத்திற்கு முன்னர் தனக்கு எழுதிய கடிதமொன்றை அவர் குறிப்பிட்டு, அவர் எழுதிய ஒரு வசனம் நினைவுக்கு வருகிறது என்றார். 'யுகம் மாறிவிட்டது என்று காதுகளுக்குச் சொல்ல வேண்டும்.இது அச்சுயுகம்' இந்த வசனத்தை குருஸ்வாமி அவர்கள் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புதுக்கவிதை என்ற பேரில் கலைக்குதவாத குப்பைகளும் அச்சுவாகனமேறி விடுகின்றன என்பதை எண்ணும்போது கவலைதான்' என்பார்.

'விமர்சனம் இலங்கையில் முன்னணியில் நிற்கிறது' என்று கருத்துச்சொல்லும் குருஸ்வாமி சிறந்த விமர்சகர்களாக ஏ.ஜே. கனகரத்தினு, மு. தளையசிங்கம் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி தருமு சிவராமு போன்றோரைக் குறிப்பிடுகிறார். 'மு. தளையசிங்கம் விமர்சனத் துறையிலேயே ஈடுபடுவதுபோலத் தெரிகிறது. இதனுல் அவரின் படைப்பாற்றல் குறையக்கூடும். அவர் படைப்பும் வளரவேண்டும்' என்பது அவரது கருத்து.

'தரமற்ற பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் தடை செய்து நல்ல தரமானவற்றை இறக்குமதி செய்ய வேண்டும்' என்ற இன்றைய கருத்தைப் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னவை: 'குப்பைகள் எவை என்று காண்பதில் கஷ்டமே இருக்கமுடியாது. இவற்றைக் கண்டுபிடித்து நிற்பாட்ட வேண்டும். சந்தாகட்டி எடுக்கும் இயக்கம் உதவி செய்யப்போவதில்லை. குப்பைகளே திரும்பவும் வரலாம்.'

குப்பைகளை எதிர்ப்பவர்கள் இங்குமட்டுமில்லை; இந்தியாவிலும் இருக்கிறார்கள். குப்பைப் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு நல்ல பத்திரிகைகள் வளரவேண்டுமென்ற நல்ல நோக்கமுள்ள சிலர் இந்தியாவிலும் இருக்கிறார்கள். இலட்சியம் ஒன்றையே முன்வைத்து இலக்கிய கர்த்தாக்கள் நடத்திய பத்திரிகைகள் குப்பைகளின் ஆதிக்கத்தால் அற்றுப்போயின. 'மணிக்கொடி' முதல் 'கிராம ஊழியன்', 'கலாமோகினி', 'தேனீ', 'சந்திரோதயம்' இவை உட்பட நேற்றைய 'சாந்தி' 'சரஸ்வதி' வரை இதே நிரந்தரத் தலைவிதிதான்.

'இங்கே நல்ல இலக்கியப் பத்திரிகைகள் வெளிவரவேண்டும். பணவசதி படைத்தவர்கள் வர்த்தக முறையிலாவது பத்திரிகைகளில் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் துறையில் வசதிபடைத்த தமிழர்கள் கவனம் செலுத்தாமலிருப்பது துர்ப்பாக்கியம்' என இவர் சொல்வதுண்டு.

'ஈழத்து மக்களிடத்தில் இந்தியர்களுக்கு ஒரு தனி மரியாதை உண்டு. ஈழத்துப் படைப்புகளுக்கும் என்றும் இந்தியாவில் மதிப்பு இருக்கும்' என்று குருஸ்வாமி அவர்கள் கூறும்போது நமக்கெல்லாம் நல்ல நம்பிக்கைகளும் மனத் தெம்பும் உண்டாகின்றன.

கொழும்புமாநகரில் சிறந்த வர்த்தகராக அறிமுகமாகியுள்ள திரு. குருஸ்வாமி அவர்கள் சிறந்த இலக்கிய ஞானஸ்த்தராயுமிருப்பதைப் பலர் நம்பமாட்டார்கள். இவரது உயர்ந்த இலக்கியப் பரீட்சையமும் எளிமையும் உரையாடற் கலையுமே இவரது தகைமைகளுக்குக் காரணம் என்பது என் எண்ணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணி வெடி

சிங்கள மூலம்: ரோகண கஸ்தூரி
தமிழில்: யாதவன்

'அப்போய் அது சின்னப் பிள்ளைகள் விளையாடுகிற சாமானில்லை.'

'ஐயோ, சியாது அண்ணே! அதை ஒருதரம் பார்க்கமட்டும் விடுங்கோ' நான் கெஞ்சியவாறு அவன் பின்னால் சென்றேன்.

'இப்ப அது என்னிடம் இல்லை மடையா! எனக்குப் பின்னால் ஏன் வருகிறாய்?'

'ஐயோ! நீ பொய் சொல்லுகிறாய் சியாது அண்ணே! எனக்குத் தெரியும், நீ அதைக் காவல் குடிசையில் வைச்சிருக்கிறாய். நானும் வரவா?' நான் கெஞ்சினேன். அவன் சேனைக்குத்தான் போகிறான் என்பது எனக்குத் தெரியும். அவன் நின்று ஒரு கணம் யோசித்தான்.

'சரிவா! நீ ஒரு கழுத்தறுக்கிற பயல். நினைத்துக்கொள். அது ஒரு பொல்லாத ஆயுதம். நான் உன்னைத் தொடவிடமாட்டேன்' முதலில் முரண்டுபிடித்த சியாது அண்ணன் கடைசியில் என்னையும் வர அனுமதித்தான்.

உண்மையில் கண்ணிவெடி என்னைப்போன்ற சிறுவனுக்கு ஏற்ற ஆயுதமல்ல. அதை நான் பார்த்ததில்லை. அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. 'இல்லை சியாது அண்ணே நான் அதைத் தொடமாட்டேன்' உறுதியோடு சொன்னேன். ஆனால் சியாது அண்ணன் நான் சொல்வதைக் கேளாதவன் போல, நடந்து சென்றான். நான் பின்தொடர்ந்தேன். பொது நிலங்களுக்கூடாக குறுக்குப் பாதை வழியே நீண்ட தூரம் மௌனமாக நடந்தோம். கடைசியில் குளக்கரையையடைந்ததும் என்னைத் திரும்பிப் பார்த்தான் சியாது அண்ணன்.

'சூட்டா! நான் வர்ர வரைக்கும் அந்தப் பற்றையருகே நில்லு' குளக்கரையை அடுத்துள்ள ஒரு பற்றையைக் காட்டியவாறு அவன் சொன்னான். பின்னர் சியாது அண்ணன் இடப்பக்கமாகத் திரும்பி குளக்கரையில் வேகமாக இறங்கினான். பின்னர் குளத்தின் கழிவு நீர்ப் பகுதியைச் சுற்றி சேற்று நிலத்தை நோக்கி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றுநிலப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த யசோஹாமினி அக்காவைக் கண்டதும் சியாது அண்ணன் எங்கு போகிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். முழங்காலளவு சேற்று நீரில், குனிந்தவாறு ஆழ்ந்த சிந்தனையோடு வேலையில் ஈடுபட்டிருந்தாள் அவள். தான் உடுத்தியிருந்த சிவத்தப் பூப்போட்ட துணியை மேலே இழுத்துச் செருகியிருந்ததால் அவளது செழிப்பான வெண்மையான தொடையின் கவர்ச்சியான பாகம் தெரிந்தது.

எங்கள் கிராமத்தில் யசோஹாமினி அக்கா மிகவும் அழகு வாய்ந்தவளாக விளங்கினாள். நான் அவளுடன் நெருங்கிய சிநேகிதம் கொண்டிருந்தேன் அவள் என்னைத் தம்பி என்றே அழைப்பாள். எங்கள் வீட்டுக்கு குரக்கன் திரிக்க வரும்பொழுதெல்லாம், எனக்கு கரும்பு கொண்டுவந்து கொடுப்பாள். அவள் மைத்துணியாக வரப் போகிறாள் என்பதை அறிந்த நாள் முதல், எனக்கு அவள் மேல் இருந்த பிரியம் அதிகமாகியது. எங்கள் வீட்டில் உள்ளவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து அவள் என் பெரிய அண்ணன் ரோமிலை மணக்க இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் பேச்சிலிருந்து இரண்டு பௌர்ணமிகள் கழிந்த பிறகு யசோஹாமினி அக்கா எங்கள் வீட்டிலேயே வந்து வசிக்கப் போகிறாள் என்பதையும் தெரிந்து கொண்டேன். அது, அநேகமாக அரிவு வெட்டுக்குப் பிறகாகத்தான் இருக்கும்.

சியாது அண்ணன் தொடர்ந்து சென்று சேற்றுப் பகுதியின் எல்லையில் யசோஹாமினி அக்காவுக்கு அருகாக ஒரு மேட்டில் நின்றான். பின்னர் அவளிடம் ஏதோ சொன்னான். அவள் தலையைத் தூக்கி அவனைநோக்கி முறுவலித்தாள். நான் றனவரா செடிக்கருகே இருந்தவாறு ஒரு கணம் அவர்களை நோக்கினேன். அவர்கள் பேச்சுக்கு முடிவில்லை போல் தோன்றியது. எனக்குப் போரடித்தது. நான் பொறுமையற்றவனாக எழுந்து கரைவழியே அவர்களை நோக்கி நடந்தேன். அவர்களது பேச்சு என் காதில் விழுந்தது.

'தயவு செய்து வா யசோஹாமினி'

'இதுக்கொல்லாம் ஒரு முடிவு காணவேண்டும் சியாது'

'நீ சொல்வது சரி யசோ! இன்றைக்கே கடைசி நாளாக இருக்கட்டும்'

'ஐயோ! எனக்கென்ன செய்வதென்றே தெரியவில்லை'

'கவலைப்படாதே யசோ! இன்றைக்கு ஒரு முடிவு எடுப்போம்'

'..................'

'தயவு செய்து மறந்துவிடாதே. என்றைக்கும்போல்காட்டுக்குள்ளே தெலும்பு மரத்தடியில் உனக்காகக் காத்திருப்பேன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோமினி அக்கா ஏதோ சொல்ல வாயெடுத்தவள் என்னைக் கண்டதும் நிறுத்தினாள்.

'அடே சூட்டாத்தம்பி! எங்கே போகிறாய்?' என்று கேட்டாள்.

'சியாது அண்ணனோடு சேனைக்குப் போகிறேன்'

'எதுக்கு?'

'கண்ணி வெடியைப் பார்க்கப் போகிறேன்'

'அட ஆண்டவனே! சூட்டாத்தம்பியின் எண்ணமெல்லாம் பெரிய ஆளைப் போலல்லவோ இருக்கிறது' என்று சொல்லியவள் சியாது அண்ணனை நோக்கிச் சிரித்தாள்.

'யசோஹாமினி! உண்மையிலே இவன் ஒரு சாத்தான். இவனைத் திருப்பி அனுப்ப எவ்வளவு பாடுபட்டேன். நான் சொன்னது அவன் காதில் ஏறினால்தானே! கண்ணி வெடியைக் காட்டு என்று ஒரே பிடிவாதமாய் நிற்கிறான். அதனால்தான் ஒருதரம் பார்க்கட்டும் என்று கூட்டிக்கொண்டு போகிறேன்' என்று என்னைப் பார்த்தவாறு சியாது யசோமினி அக்காவுக்குச் சொன்னான்.

'சரி வா போவோம்' என்றான். நாங்கள் யசோஹாமினி அக்காவிடமிருந்து மீண்டும் குளக்கரையை நோக்கி நடந்தோம்.

'மடையா! நான் உன்னை அங்கே இருக்கச் சொல்லியும் இங்கே ஏன் ஓட்டுக் கேட்க வந்தாய்' சியாது அண்ணனின் குரலில் சந்தேகமில்லாமல் சோகம் தொனித்தது.

'நீ அங்கே போய் எவ்வளவு நேரமாச்சு சியாது அண்ணே!' இல்லாவிட்டால் நான் ஏன் அங்கே வரப்போகிறேன், அப்படிஎன்ன யசோஹாமினிஅக்காவோடை பேசிக் கொண்டிருந்தாய்?' அவனைச் சமாதானப் படுத்துகிறாற்போல சொன்னேன்.

'மடையா! உனக்கு எல்லாம் தெரியவேணுமா? நான் அங்கே போவது.........! நான் அங்கே அவளோடு...... போகிறேன்'

'ஷ்ஷ்... ஊத்தைப் பேச்சு பேசாதே, அது கூடாது!'

'அது கூடாது? பார்...... என்னைப்போல வளர்ந்தபிறகு அது உனக்கு நல்லாயிருக்கும்' சியாது அண்ணனின் கோபம் மறைந்து அவனது சிரிப்பு வெகு தூரத்திற்கு எதிரொலித்தது. அவனது பேச்சு என்னை திகைக்கச் செய்தாலும் நான் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. அவன் அப்படிப் பேசியது, நான் ஏதாவது தெரிந்து கொண்டேனா என்று சோதிப்பதற்காகவே என்று நினைத்துக் கொண்டேன்.

அங்கிருந்து மௌனமாக நடந்தோம். நாங்கள் சேனையை அடைந்ததும் அவனுக்கு முன்னால் ஓடினேன். அவனுக்காகக் காத்திருக்காது, மரப்பாலத்தை ஒரே தாவில் தாண்டி, காவல் குடிசையை நோக்கி விரைந்தேன். பச்சைப் பசேலென்று குரக்கன் என் தோள்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்திருந்தது. மஞ்சள் நிற முள்ள குரக்கன் மடல்களையும் முற்றியிருக்கும் அவற்றிடமிருந்து எழும் சுகந்த மணத்தையும் கொண்டு, அது ஒரு குரக்கன் சேனை என்று எவருமே சொல்லிவிடுவர்.

நான் காவல் குடிசையை அடைந்தேன். அதன் ஓலைக்கதவு சாத்தியிருந்தது. அதன் தாட்பாளை அகற்றித் திறந்தேன். பின்னர் சியாதுஅண்ணர் உள்ளே நுழையும்வரை காத்திருந்தேன் அவன் உள்ளே சென்றதும் கண்ணிவெடியைக் காட்டுவான் என்று எதிர் பார்த்த நான் ஏமாற்றம் அடைந்தேன். அவ தன் மூங்கில் கட்டிலில் இருந்த தலையணையை அகற்றிவிட்டு என் பொறுமையைச் சோதிக்கிறது போல, வெற்றிலைப் பையை எடுத்து சாவதானமாக ஒரு வாய்க்கு வெற்றிலைபோட்டான்.

'வெடி எங்கே சியாது அண்ணே?' நான் கேட்டேன்.

'என்னடா மடையா! நான் காட்டும் வரை பொறுத்திரேன்; அது இங்கேதான் இருக்கு' என்றுன். நான் என் கண்களை அந்தக் குடிசையின் ஒவ்வொரு மூலைக்கும் செலுத்தினேன். ஒரு மூலையில் ஈர்க்குமாறும், ஒரு வாளி தண்ணீரும் கிண்ணமும் கத்தியும் இருந்தன. சுவராயிருந்த பனை ஓலைத் தட்டியில் ஒரு புத்தர்படம் இருந்தது. கீழே, தரையில் ஊதுபத்தி எரிந்த சாம்பல் கொட்டியிருந்தது.

'எங்கே?'

'அது இங்கேதான் இருக்கு பொடியா!' சியாது அண்ணன் எழுந்து கட்டிலில் ஏறி நின்றவாறு கூரையின் ஓலையை விலக்கிவிட்டு கையை உள்ளே விட்டான். நான் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தேன். ஒருகணம் தான் மறுகணம் பாம்பை மிதித்தவன்போல துள்ளிக்குதித்தான் மலைப்போடு என்னைப் பார்த்தான்;

'யாரோ வேசை மகன் என் வெடியைத் திருடி விட்டான்' அவன் முணுமுணுத்தான்.

'உண்மையா? இல்லை பொய் சொல்லுறியா?'

'என்னடா பேசுருய்! எனக்குத் தெரியாதா எங்கே வைத்தேன் என்று. அதைக் காண வில்லை. அது களவுபோய்விட்டது ஆண்டவனுக்குத்தான் தெரியும் எந்த நாய்ப்பயல் எடுத்தான் என்று' கோபத்தோடு கடுகடுத்தான்.

'இப்ப என்ன செய்யப் போகிருய்?'

'ஒன்றுமில்லை நீ வீட்டுக்குப் போ!'

நான் அவனுக்காக வருத்தப்பட்டேன். நான் மேலும் அங்கு இருப்பது எனக்குச் சரியாகப் படவில்லை; அங்கிருந்து வெளியேறி வீட்டை நோக்கி வருத்தத்தோடு நடந்தேன். வழியில் என் பெரிய அண்ணன் காட்டுக்குள்ளிருந்து வெளிவருவதைக் கண்டேன். அவன் அங்கிருந்துவந்து பாதையில் எனக்கு முன்னல் சில யார் தூரத்தில் ஏறினன்.

'பெரியண்ணே!' என்று கத்தினேன். அவன் திரும்பிப்பார்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவன் முகம் குழம்பியிருப்பதைக் கண்டுகொண்டேன். ஒரு பெருமூச்சின் மூலம் தன் கலக்கத்தைத் தவிர்க்க முயன்ருன்.

'எங்கே போஞய்?'

'சியாது அண்ணேனோட சேனைக்குப் போனேன்'

'எதுக்காக?'

'கண்ணிவெடியைப் பார்க்கப் போனேன் ஆனல் அது களவு போய்விட்டது'

'நிசமாகவா?'

'உம்...... யாரோ களவெடுத்திட்டாங்கள். அதப்பார்க்க முடியவில்லே.'

'கண்ணி வெடியைப் பார்க்கிறதுக்கு ஒன்றுமில்லே. மற்றத் துவக்கைப் போல இதுக்கும் ஒரு குழாய் இருக்கிறது. ஆனல் இதைக் கையால் இயக்க முடியாது...! அதை எங்காவது ஓரிடத்தில் இரகசியமாக வைத்து விட்டு மரணப் பொறியுடன் இணைத்தால் சரி. ஏதாவது மிருகம் அந்தப் பொறியில் கால் வைத்தால் போதும். அதுதான் அதற்குக் கடைசி......' வீட்டுக்குப் போகும் வழியில் பெரிய அண்ணன் கண்ணி வெடியைப் பற்றி விளக்கியவாறு வந்தான். குறுக்குப் பாதையின் முடிவு வந்ததும் நின்று ஒரு கணம் யோசித்தான்.

'தம்பி நீ வீட்டுக்குப் போ! நான் கடைக்குப்போய் பீடி பற்றவைச்சுக்கொண்டு வாறேன்' என்ருன்.

அன்று மாலே நாங்கள் அடுக்களையிலிருந்து தேநீர் குடித்துக் கொண்டிருக்கையில் பெரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. சேனையின் எல்லேயான காட்டுப் பகுதியிலிருந்து அந்தச் சத்தம் கேட்டது. அதே நேரத்தில் ஒரு பெரிய ஓலமும் எழுந்தது.

'அம் மோஓ......ஓ ஓ......'

நடுங்கவைக்கும் அந்த அலறல் காற்ருேடு கலந்து கிராமம் எங்கும் ஒலித்தது. எங்கும் பயங்கரமான அமைதி நிலவியது.

எனது மனம் பயத்தால் அடித்துக் கொண்டது. பெரிய அண்ணனை நோக்கினேன். தேநீர் சிரட்டையுடன் அமர்ந்திருந்த பெரிய அண்ணன், அகன்ற விழிகளால், உணர்வற்றவனுகஎன்னை நோக்கினன். சில விஞடிகள் நாங்கள் அனைவரும் பேச்சிழந்திருந்தோம்.

'யாரே சுடுபட்டுப்போனுன் நான் அந்தப்பக்கம்போகிறேன்' கடைசியில் என் தந்தை அந்த அமைதியைக் குலேத்தவாறு கூறினர். எழுந்து வேகமாக அடுக்களையைத் தாண்டி வெளியில் ஓடினர். பெரிய அண்ணனும் அவரைப் பின்தொடர்ந்தான்.

என்ன நடந்தது என்பதை அறிய அவர்கள் வரும்வரை நாங்கள் காத்திருக்கவில்லே. கோடை காலத்துப் பற்றைத்தீ போல, அந்தச் செய்தி கிராமமெங்கும்பரவிவிட்டது-தெலும்பு மரத்தருகே தன் சொந்தக் கண்ணிவெடியினல் சுடுபட்டு இறந்துபோனுன் சியாது அண்ணன்.

அன்று மாலேயில் மிக நேரங் கழித்து வீடுதிரும்பியஎன்தந்தை அந்தச் சம்பவம்பற்றி விளக்கமாகக் கூறினர்.

'இந்தப் பயல் சியாதுவுக்கு எப்பவுமே கவலேயீனம் தான். வெடியைப் பொருத்துகிற சமயத்தில்தான் ஏதோ தவறுதலாக நடந்துவிட்டது என்று கூறிமுடித்தார்.

அன்று மாலே என் பெரிய அண்ணன் வீடு திரும்பவில்லே. அந்தக் கிராமத்தை விட்டே மறைந்துபோனுன். இப்போது கூட அவன் எங்கிருக்கிருன் என்பது யாருக்குமே தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற

# வானொலி நாடகப் பயிற்சி வகுப்புக்கள்

நவாலியூர் நடேசன்

வானொலி தமிழ்ப்பகுதியில் இலங்கையின் ஏனையபாகங்களிலுமுள்ள திறமை வாய்ந்த தமிழ் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் போதியவாய்ப்பளிக்கப்படுவதில்லை; கொழும்பில் வாழும் குறிப்பிட்ட ஒரு வட்டத்தினருக்கும் வேறுசிலருக்குமே இடமளிக்கப் படுகிறது என்றும், அதில் நடைபெற்று வரும் குறிப்பிட்ட ஒருசில நிகழ்ச்சிகள் பற்றியும் உண்மையான விமர்சனம் செய்துவந்த எமது மத்தியில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் பயிற்சி நிலைய உதவி நெறியாளர் திரு. சி. வி. இராஜசுந்தரம் அவர்கள் வானொலி நாடகம் எழுதுவது, தயாரிப்பது, நடிப்பது பற்றிய பயிற்சி வகுப்புக்களை அணிமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருவாரங்களாக சிறப்புற நடாத்தினார். பிரபல எழுத்தாளர்களும், கலைஞர்களும் கலந்துவந்த இப்பயிற்சி வகுப்புக்களின் தொடர்பாக வானொலி நாடக பயிற்சிக் களமும் நிறுவப்பட்டது.

இதுபோன்ற பயிற்சிக் களங்கள் ஏனைய மாவட்டங்களிலும் நிறுவப்படுமாம். இக்களங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கவிஞர்கள் படைக்கும் வானொலி நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள், ஒலிச்சித்திரங்கள் முதலியவை வானொலியில் ஒலிபரப்புவதற்குத் தகுதியுடையனவா என இக்களத்தில் வாசித்து விமர்சித்து, திருத்தி ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு அனுப்பப்படும். மேற்படி நிகழ்ச்சிகளை வானொலியில் ஒலிபரப்புவதற்கு இக்களத்தைச் சேர்ந்த கலைஞர்களை வைத்தே இக்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினர் தயாரிப்பதற்கு வசதிக ளும் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்புக்களின்போது ஏனைய பகுதிகளிலுள்ள கலைஞர்களுக்கு, குறிப்பாக நடிகர்களுக்கு வானொலி நாடகங்களில் இடமளிப்பதில்லை என்பதையும், பிற பல குறைபாடுகளையும் சமுகமளித்த ஒருவராவது அழுத்தமாகச் சுட்டிக் காட்டத் தவறவில்லை!

வானொலி நாடகத்தில் நடிப்பவர்களுக்கு பிரயாணச் செலவு கொடுப்பதில்லை. எனவேதான், கொழும்பு தவிர்ந்த பல்வேறு பகுதிகளிலுள்ள நடிகர்களை வானொலி நாடகத்தில் நடிக்க வாய்ப்பளிக்க வசதியில்லாதிருக்கிறது என திரு. இராஜசுந்தரம் தெரிவித்தார்.

பிற நாடுகளில் வானொலி நிகழ்ச்சிகளில் திறமைவாய்ந்த எல்லா எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் இடமளித்து கலைச்சுவைமிக்க புதுப் புது நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகின்றன என விளக்கிய இக் களத்தினர், இங்குள்ள எழுத்தாளர்களும், கலைஞர்களும் வானொலியுடன் மிக நெருங்கிய தொடர்புள்ளவர்களாக விளங்க வழி வகுக்க வேண்டும், அப்போது தான் வானொலி நிகழ்ச்சிகள் தரம்பெற்றுச் சிறப்பதுடன், அவர்களின் திறமைகள் மேலும் மேலும் வளர்ந்துசெல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதை வலியுறுத்தும் வண்ணம் பல தீர்மானங்கள் நிறைவேறின.

வட மாகாணத்திலுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற கொழும்பிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் மிகச் சிலருக்கே வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. திறமை வாய்ந்த எல்லோருக்கும் இடமளிக்க வசதியாக யாழ்ப்பாணத்தில் உப வானொலி நிலையத்தை நிறுவவேண்டும். அதற்கு முன்பு தற்காலிக கலையகமொன்றினை நிறுவ வேண்டும் என ஒரு தீர்மானம். உப வானொலி நிலையத்தை வடமாகாணத்தில் கூட்டுத்தாபனம் நிறுவ இருப்பதாக சமீபத்தில் வெளியான செய்தி எமக்கு மகிழ்வூட்டுகின்றது.

'வானொலி மஞ்சரி தனது சிறுகதைப் போட்டியில் பரிசுக்கு ஏற்ற கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு தான் வெளியிடும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படியும், கூப்பன் தொகைகளை வைத்தே மேற்படி கதைகளைத் தேர்ந்தெடுப்பது என்றும் அறிவித்து போட்டியை நடாத்திய முறையை ஒவ்வொருவரும் காரசாரமாகக் கண்டித்தனர். இது எழுத்தாளரை அவமதித்தமையாகும். இத்தகைய முறை இனிமேல் நிகழாது பார்த்துக் கொள்ளவேண்டும் என கேட்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது இங்கு நிறைவேற்றப்படும் தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானங்களை அடிப்படையாக வைத்து பயிற்சி வகுப்புப்பற்றிய அறிக்கையை எழுதி மேலதிகாரிகளுக்குச் சமர்ப்பிப்பதாக திரு. இராஜசுந்தரம் கூறினர்.

பல பிரச்சினைகள் எடுத்து விளக்கப்பட்ட இவ்வகுப்புக்கள் அறிவுக்கு விருந்தாகவும், இலக்கிய மணம் சமழ்வனவாகவும் விளங்கின.

கருப்பொருள், உரிப்பொருள் பற்றிய விளக்கத்துடனும், கலந்துரையாடலுடனும் தொடங்கிய இவ் வகுப்புக்களில் வானொலி நாடகத்தின் ஒவ்வொரு கூறுகளும் விளக்கப்பட்டன. சிலர் பரீட்சார்த்தமாக தாம் எழுதிய வானொலி நாடகங்களை இவ் வகுப்புக்களில் வாசிக்க ஏனையோர் அவற்றை விமர்சித்து கருத்துப் பரிமாறல் வழங்கினர்.

மேடையில் நடக்கும் நாடகங்களில் வசனம், பாடல்களை நாம் கேட்பதுடன், அவற்றில் வரும் காட்சி ஜோடினைகள், நடிகர் நடிகைகளின் ஒப்பனை, நடிப்பு, தோற்றம் முதலியவைகளையும் நேரிலே கண்டு அனுபவிக்கிறோம். இந் நாடகங்களில் உள்ளங் கொள்ளை கொள்ளும் பேரழகியாகத் திகழும் ஒரு நங்கை, நடிப்பில் அல்லது பாட்டில் சிறிது மட்டமாக இருந்தாலும் அவளது எழிற் தோற்றம் எப்படியோ ரசிகர்களின் உள்ளத்திலே நிழலாடும். அழகியின் பாத்திரத்தைத் தாங்கவேண்டியவள் அழகாகவே திகழ்கிறள்! இன்னொரு நாடகத்தில் காட்சி அமைப்புக்கள், நடிகர், நடிகைகளின் ஒப்பனை, ஆடை அலங்காரம் எல்லாம் எடுப்பாக இருக்கின்றன. ஆனல், நாடகத்தின் கதை உயிர்த்துடிப்புள்ளதாக இல்லை. இந் நாடகத்தில் ரசிகர் தாம் கண்ட காட்சி அமைப்புக்கள், ஒப்பனை அழகு பற்றிய ஒருவித திருப்தியுடன் செல்கிறார்கள்.

வானொலி நாடகத்தில் ஒலி மூலமே எதையும் மக்களின் மனக்கண்களுக்குக் காட்டி அவர்களின் மனதைத் திருப்திப்படுத்த வேண்டும். ஒலிமூலமே கதையை விறுவிறுப்பாகநகர்த்த வேண்டும். அழகியாக ஒருபாத்திரம் படைக்கப்பட்டால் அவள் அழகி என்பதை ஒலி மூலமே ரசிகர்களுக்கு உணர்த்தவேண்டும். கோட்டை கொத்தளங்கள், ஏரிக்கரை, கடற்கரை முதலியன எல்லாம் ஒலிமூலமே விளக்கப்படவேண்டும். வானொலிநாடகத்தில் ஒலியே எமது மனத்திரையில் நாடகக் காட்சிகளை படமாக வரைந்து செல்லும் தூரிகையாக விளங்குகின்றது. எனவே, வானொலி நாடகத்திற்கு நாம் தேடிக்கொள்ளும் உரிப்பொருளும், அமைக்கும் வசனங்களும் இத்தகைய சக்தி நிறைந்தவையாய் விளங்க வேண்டும்.

மேடை நாடகங்களில் சூரியோதயம், சந்திரோதயம், மாலைக்காட்சி, இருண்ட நள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவு என்றெல்லாம் நேரத்தை விளக்கும் இயற்கைக் காட்சிகளை அழகாகக் காட்டுகிறார்கள். வானொலி நாடகத்தில் இவற்றை ஒலிமூலமே காட்டலாம். ஆதலால் இந்நாடகத்தில் உரிப்பொருளையும், கருப்பொருளையும் பற்றிச் சிந்தித்தால் மாத்திரம் போதாது. முதற்பொருளையும் ஊன்றி நோக்க வேண்டியது அவசியம். தமிழ் அகப்பொருள் இலக்கியங்களைப் புலவர்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருள்களால் விரித்துச் சொல்லியுள்ளார்கள். நிலம், சிறுபொழுது, பெரும் பொழுது என்பன முதற்பொருளைச் சார்ந்தவையாகும். கதைச் சம்பவம் எந்த இடத்தில் நடைபெறுகின்றது, என்பது நிலத்தின் பாற்படும். கதை நிகழ்ச்சி இரவிலா பகலிலா அல்லது எந்த நேரத்தில் நிகழ்கின்றது என்பது சிறுபொழுது. மழைக்காலம், வேனிற்காலம் என்று பருவகாலங்களை விளக்குவது பெரும் பொழுதாகும். ஒலிமூலம் கதை சொல்லும் வானொலி நாடகத்தில் முதற்பொருளை நாம் ஒலிமூலமே தத்ரூபமாக ரசிகர்களின் உள்ளத் திரையிலே காட்ட வேண்டும். ஆதலால் முதற்பொருளை நுண்மையாக நாடகப் போக்குடன் விளக்கும் திறன் இருக்கவேண்டும். உரிப்பொருள், கருப்பொருள் என்பவற்றுடன் முதற்பொருளும் வானொலி நாடகத்திற்கு மிகவும் சிறப்பு அம்சமாக விளங்குகின்றது.

பயிற்சி வகுப்பில் வசனம் எழுதுவது பற்றிய கலந்துரையாடல் நீண்ட கருத்துப் பரிமாறலுடையதாக; சுவைததும்பியதாக; அறிவுக்கு நல்விருந்தாக விளங்கியது. திரு. இராஜசுந்தரம், நாடக வசனங்கள் பாத்திரங்களின் தன்மைகளுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும். சாதாரண ஒரு தொழிலாளி பேசுவதாக வரும் வசனம் அவனது சாதாரண பேச்சு வழக்கிலேயே அமைக்கப்பட வேண்டும் என்று வசனம்பற்றி கருத்துப் பரிமாறலைத் தொடக்கி ஏனையோர் கருத்துக்களைக் கூற இடமளித்தார்.

யதார்த்தமாகப் பாத்திரங்கள் பேசவேண்டும் என்பதற்காக வீதியில் போகிறவர்கள் பேசும் தேவையற்ற பேச்சுக்களை நாடகத்தில் பேசித்தீர்ப்பது கலையுமல்ல, பண்புமல்ல. இத்தகைய வசனங்கள் நாடகக் கதையின் உணர்ச்சிமயமான ஓட்டத்தைப் பாதிக்கின்றன. நாடகக் கதைக்கும் பாத்திரத்தின் தன்மைக்கும் உயிரூட்டும் வசனங்கள் எழுதப்பட வேண்டும் என இரசிகமணி கனக செந்திநாதன் கூறினார். திரு. இராஜசுந்தரம் அக்கருத்தையே வலியுறுத்தி மேலும் விளக்கினார். திரு. டொமினிக் ஜீவா, இங்கே சிலர் தாம் எங்கே வாழ்கிறோம் என்பதை உணராது தென்னிந்திய கொச்சைத்தமிழ் வசனங்கள்தான் நாடகத்தமிழ் என்று கருதுவதாகக் கண்டித்தார். இரசிகமணி கனக செந்திநாதன் இது குறித்து மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகையில், தென்னிந்தியப் படங்கள் புதிய பாணியில் வந்த பின்புதான் கணவனை மனைவி அல்லது காதலனைக் காதலி 'அத்தான், என்று அழைக்கும் 'நாகரீகப் பாஷை' இங்கு வந்தது. யாழ்ப்பாணத்திற்குரிய மண்வளச் சொல் 'மச்சான்' என்பதுதான். 'சீனி அப்பு' என்பது யாழ்ப்பாண மண்வளச் சொற்களில் ஒன்று. யாழ்ப்பாணப் பண்பு தொனிக்க யதார்த்தமாகப் பாத்திரங்களைச் சிருஷ்டிக்க வேண்டுமானால் அப்பாத்திரங்கள் பேசுவதற்கான வசனங்களை இத்தகைய யாழ்ப்பாணப் பண்புகளில் ஊறியவையாக கதையின் உணர்ச்சி ஓட்டம் தடைப்படாது நிதானமாகவும் நாகரீகமாகவும் இங்கிதமாகவும் எழுத்தாளன் எழுதவேண்டும். இது சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் பொருந்தும் என்றார். திரு. ஏ. ஜே. கனகரட்ண இக்கருத்தை வலியுறுத்தி மேல் நாட்டு இலக்கிய கர்த்தாக்களின் மேற்கோள்களை எடுத்து விளக்கினார்.

யாழ்ப்பாணக் கொச்சைப் பேச்சைப் பேசுவதே நகைச்சுவை நாடகம் என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் யதார்த்தம் என்று தப்பான விளக்கத்துடன் வாய்கூசும் பேச்சுக்களையெல்லாம் எழுதி யாழ்ப்பாணத்திற்கும் நாடகக்கலைக்கும் இழிவு தேடிவருகின்றனர் என்ற கருத்துக்களைப் பலர் தெரிவித்தனர்.

நாடக வசனங்கள் கதை நிகழும் பிரதேச மண்வளமுடையனவாக, பாத்திரத்தின் தன்மைக்கு முரண்படாதவையாக, கதை நகர்ந்து செல்லும் வேகத்திற்கும் பாத்திரத்தின் பண்பிற்கும் ஊறு செய்யாது ஊட்டமளிக்கக்கூடியவையாக அமைய வேண்டும் என்ற கருத்துக்களை எல்லோருமே வலியுறுத்தினர்.

இலங்கை வானொலியில் சில நாட்களுக்கு முன்பு ஒலிபரப்பப்பட்ட ஒரு நாடகத்தை ஒலிப்பதிவு செய்துகொண்டு வந்த திரு. இராஜசுந்தரம், அந்நாடகம் பற்றிய விமர்சனங்களைத் தெரிவிக்குமாறு ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிபரப்பினார். வானொலியில் ஒலிபரப்பாகியமைக்கு ஏற்ற எந்தவித தகுதியும் அந்நாடகத்தில் இல்லை என எல்லோரும் அபிப்பிராயம் கூறினர்.

பயிற்சி வகுப்பின் இறுதி நாளன்று திரு. இராஜசுந்தரத்திற்கு தேநீர் விருந்தளிக்கப்பட்டதுடன் எழுத்தாளர், கலைஞர் அறிமுகமும் செய்து வைக்கப்பட்டது. இங்குள்ள எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் வானொலியுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வானொலி நாடகப் பயிற்சிக் களகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். அப்போதுதான் இக்களம் நிறுவப்பட்டதன் அடிப்படை நோக்கம் பயனளிக்கும் என மேற்படி களத்தின் செயலாளர் தனது நன்றியுரையில் கேட்டுக்கொண்டார். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கெழுவோம்!

மு. பொன்னம்பலம்

சரித்திரம் கேளீர்! சரித்திரம் கேளீர்!

முன்னொரு காலம் இலங்கையர் நாங்கள்
அந்நியர் கையில் அடிமைகளாக
உரிமை யிழந்து, உடைமை யிழந்து,
நமது பெருமை யாவும் இழந்து
ஓடாய் உழைத்து வாடி யிருந்தோம்.

பின்னர் சுதந்திரம் பேண எழுந்தோம்!
ஓர்தாய் வயிற்றின் பிள்ளைகளாக
அண்ணன் தம்பி போன்ற பிணைப்பில்
அடிமை விலங்கை உடைத்தெறிந் திங்கே
ஆண்மை நிறுவி மேன்மை யடைந்தோம்!

சரித்திரம் கேளீர்! சரித்திரம் கேளீர்!

பின்னர் நமக்குள் பொருளா தாரப்
பிரச்சனை சிற்சில செவியை உதறின.
இதனால் நமக்குள் இயல்பாய் இருந்த
பிளவுகள் மெல்லத் தலைகள் நிமிர்த்தின
பெரிசு சிறிசுப் போட்டி எழுந்தது
நானோர் தமிழன், நீயோர் சிங்களன்!
நானொரு முஸ்லீம், நீயொரு பறங்கி!
என்மதம் சைவம், உன்மதம் பௌத்தம்!
கிறிஸ்த்தவம் எனது, இஸ்லாம் உனது!
நான் வெள்ளாளன், நீயொரு பள்ளன்!
நானொரு றதலா, நீயொரு றொடியா!

இப்படி யான பிளவுகள் எல்லாம்
தப்புக் கொட்டி வெளிப்பட லாயின!

அந்நியர் ஆட்சியில் அடங்கி யிருந்த
ஊமைக் காயம் போன்ற இவைகள்
தலையை உயர்த்தித் தம்மைக் காட்டின!

நிலையிதை உணர்ந்த தீய சக்திகள்
ஓரின மாக ஒன்று திரண்டன!
தம்மை வளர்க்கும் வாய்ப்புகள் பெற்றன.
வகுப்பு வாதம் வளர்த்தது ஒன்று
வந்தது அதனால் சிங்களம் மட்டும்!
மதத்தை அண்டி வாழ்வன, இன்னோர்
கோஷ்டி நிறுவிக் கூக்குரல் இட்டன!
சிங்கள பௌத்தம், 'கத்தலிக் அக்ஷன்,
சிறுபான்மையினர் பெரும் பான்மையினர் -
என்பவை எல்லாம் இதனால் வலுத்தன!
பெரிசு சிறிசின் உரிமை பறித்தது
உரிமை யிழந்தோர் ஓர்சிலர் கூடி
'ஐம்பதுக் கைம்பது' கேட்டனர், இன்னும்
'தமிழரசு' சென்றும் தட்டினர் பறைகள்!
தமக்குள் ஆயிரம் பிளவுக ளோடு-
தாழ்த்தப் பட்டவர், ஆலய அடைப்பு,
சமூகச் சிக்கல், உணவுப் பிரச்சனை-
ஆகிய ஆயிரம் அழுக்குகளோடு-
உரிமைப் போருக் குதவா நிலையில்
இருபது வருஷம் இழுத்துப் பறித்தனர்

இதற்குள் மக்களைப் புரட்சிப்படுத்த
பொதுமைத் தத்துவம் போட்டு வளர்ந்த
மார்க்ஸின் தத்துப் பிள்ளைகட் குள்ளும்
பித்துப் பிடுங்கல். ஆயிரம் பிளவு!
குத்து வெட்டுக் குழுக்களோ நூறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழல் கண்டு ரசித்து,
இதனைத் தனக்கு எருவாய் மாற்றி,
வளர்ந்தது இதற்குள் முதலாளித்துவம்!
உழைப்பவர் எல்லாம் ஒற்றுமையுற்றால்
உழைப்பை உறுஞ்சி வாழும் தனக்கு
ஆபத்தென்று உணர்ந்தது அதுவே!
உணர்ந்ததும் உடனே செயலில் இறங்கிற்று!
எமக்குள் முன்னர் இருந்து வளர்ந்த
பிளவை இன்னும் பெரிதாய் வளர்த்தது!
பத்திரிகைச் சுதந்திரம் என்பதும் அதுவே
செய்தியைத் திரித்துக் கொடுப்பதும் அதுவே!
'சிங்களம் மட்டும்' என்றிடும் தெற்கில்
தமிழரசுக்கும் தொட்டிலை ஆட்டும்!
56 கலவரம்,
பின்னர்
58 கலவரம் - இவற்றின்
பின்னணி வசன கர்த்தா இதுவே!
தனக்கெதிராக அரசு முனைந்தால்
தேவைப் பொருட்களைப் பதுக்கி வைத்து
விலையை ஏற்றி விற்பதும் இதுவே
பழியை அரசில் காண்பதும் இதுவே;
இப்படியாக முதலாளித்துவம்
மக்களை இந்தப் பிரச்சனை மூலம்
மோதித் திணறி மூழ்கிட விட்டு
ஆயிரம் தீய சக்திகள் நடுவே
தானும் ஒன்றாய் தன்னை வளர்த்தது!
தேயும் நாட்டை இன்னும் தேய்த்தது!

சரித்திரம் கேளீர் சரித்திரம் கேளீர்!
ஆயினும் தர்மம் அழிவதே இல்லை!
மீண்டும் மீண்டும் தன்னை நிறுத்த
ஆயிரம் ஆயிரம் போர்கள் நிகழ்த்தும்!

இன்றோ தர்மம் எழுவதற் கேற்ற
காலம் வந்து சூழ்ந்தே உள்ளது!
கலகம் சூழ்ந்தபோதிலும், யுத்த
களத்தில் இன்னும் வேலைகள் உண்டு!
சுயநலம், சூழ்ச்சி, துவேஷக் குணங்கள்
ஒருவரை நசுக்கி மற்றவர் எழுதல்,
உரிமையை விற்றுப் பெருமை அடைதல்,
ஒத்தே ஓடுதல், ஓமோம் போடுதல்
முதலாளித் துவத்தின் முதலை மூச்சுகள்
இன்னும் அடியில், ராட்சத உருவில்
அசையும் குழியின் அதிர்வுகள் கேட்கும்
அவற்றை இன்றே ஒழித்துக் கட்ட
போருக் கெழுவோம்! போருக் கெழுவோம்,
கட்சி அமைப்போம், கிளைகள் திறப்போம்
கட்சியும் கிளையும் தாம்தரும் புதிய
சத்திய நோக்கின் களங்களாய் மாற
நித்திய இயக்கம் நமக்குள் தேவை!
நித்திய இயக்கம், அதுவே முக்கியம்!
நித்திய இயக்கம் என்பது நீசரை
பக்கம் எடுக்க வைக்கும் யுத்தம்!
நிற்பவர் அல்ல முக்கியம், அன்னார்
நிற்கும் பக்கம் ஒன்றே முக்கியம்!
தீமை விளையும் பக்கம் என்றால்
தாய் நின்றாலும் சாடுதல் தர்மம்!
பகைவர் நமக்குள் ளேயும் உள்ளனர்.
தாமத ராஜத, சாத்விக என்னும்
குணங்களில் விளையும் பகைவரோ கோடி!
தொடங்கிய நமது சத்திய யுத்தம்
அகத்தும் புறத்தும் அதனால், எழுக!
நித்திய இயக்கம் என்பது இனிமேல்
சத்திய யுத்தம் அகத்தும் புறத்தும்!

— *சத்தியம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா



# கந்தசாமி வெட்கப்படுகிறான்....!

பாணந்துறை ஸ்லோ றெயில் 'சிலேவ்ஜலண்டில்' நின்ற போது, அவன் அந்தப் பெட்டிக் குள் ஏறினான்.

கிலுக்...... கிலுக்......

வலது கையிலொரு பேணி யைக் குலுக்கிக்கொண்டு, தடி யினால் தட்டித்தடவியபடி சீற் றோரமாக, அவன் நடந்து கொண்டிருந்தான்.

அந்தச் சிந்தெற்றிக் ட்றவு ஷர் இளைஞனுக்கு இவன் வந்தது சங்கடத்தைக் கொடுத்திருக்க வேண்டும்; அவன், ஜன்னலுக்கு வெளியே தலையைநீட்டி எட்டிப் பார்த்தான்.

சிறிய குலுக்கலுடன் ட்றெ யின் ஓடத் தொடங்கியது.

இடைநேரமாதலால் கூட்ட மிருக்காத அந்தப் பெட்டிக்குள் ஐந்தோ ஆறு பேர்கள்தான் இருந்தார்கள்.

கிலுக்...... கிலுக்......

பெட்டி முடிவில் தடிநுனி யில் பலகை தட்டப்பட, அவன் இடப்பக்கந் திரும்பி நடந்தான். கடற்பக்கக் கதவருகில் நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி, கால் மேல் கால் போட்டபடி இருந்து கொண்டிருந்தாள்.

அவள் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததினால், இவனது வருகை அவளைப் பதட்டமடை யச் செய்ததாகத் தெரியவில்லை; அவள், நிமிர்ந்தபடி நேரே பார்த்துக்கொண்டிருந்தாள்.

கிலுக்...... கிலுக்......

திறக்கப்பட்டிருந்த கதவோ ரத்தில்-வெளிக்கம்பியைப் பிடித் தபடி எதையோ தேடுபவனைப் போல, கடலையே உற்றுப்பார்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபடி அந்தக் காற்சட்டைக் காரப் பொடியன், நின்றுகொண் டிருந்தான்.

அந்தக் கதவிடை வெளியை பழகிவிட்ட ஒரு இலாகவத் தோடு தடியை ஊன்றியபடி கடந்து மற்றச் சீற்றருகே, அந் தக் குருட்டுப் பிச்சைக்காரன் போனுன்.

கிலுக்...... கிலுக்......

அந்தப் பக்கத்திலிருந்த இரண்டு பேரும் அவனது வரு கையைக் காணுதவர்களே போன்று, விரிக்கப்பட்ட 'சவஸ' பேப்பருக்குள் முகத்தைப்புதைத் துக் கொண்டார்கள்.

கண் தெரியாததால் அவர் களுக்குப் பக்கத்தில் வெறுமை யாயிருந்த சீற்றுக்கு முன்னுலும் குலுக்கியபடி அவன் மெல்லமாக நடந்து கொண்டிருந்தபோது...,

அந்தச் சீற்று முடிந்து திரும் புகிற மறுபக்கச் சீற்றின் நடுவி லிருந்த கந்தசாமி, இயல்பாகவே தன் பையைக் கையினுல் தட்டிப் பார்த்தான்; கையில், சில்லறை கள் தட்டுப்பட்ட படி.........

ஆனுல் அந்தப்பிச்சைக்கா ரன் தனது பக்கமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவனுக்குத் தயக்கம்.

'......... ஒருத்தரும் போட இல்ல'

அந்தப் பெட்டியில் ஒருவ ருமே ஒன்றும் போடாமலிருக் கும்போது தான்மட்டும் போட, அவனுக்கு ஒரு மாதிரி இருந் தது. ஏதோ செய்யத்தகாததை தனிமையாகவே செய்ய நேர்ந் ததைப் போல், கூச்சப்பட்டுச் சங்கடப்பட்டுக் கொண்டிருந் தான்.

கிலுக்...... கிலுக் .....

பேணியைக் குலுக்கியபடி தனக்குப் பக்கமாக அந்தப்பிச் சைக்காரன் வந்தபோது அவனே நேரே பார்க்கவும் சங்கடப்பட்டு எதிரே கண்களை உயர்த்திப் பார்த்தபோது சாமான் பல கைக்குக் கீழே எழுதப்பட்டிருந்த சிங்கள எழுத்துக்கள் தட்டுப் பட்டன 'மெய லாங்கிக்க ஜனத் தாவ சந்து பவின் எய ஆறக்ஷா கிறீம ஒபகே பறம யுத்துகமய'

இது இலங்கை மக்களின் சொத்து; ஆதலால் இதனைப் பாதுகாப்பது, உங்களுடைய கடமைதான்.

மௌனமாக அதைவாசித்து முடித்தபோது சிறிய குலுக்க லோடு கொள்ளுப்பிட்டியில் ட்றெயின் நின்றது. கந்தசாமி திரும்பிக் கதவடியைப் பார்த் தான். அவன்- அந்தப் பிச்சைக் காரன் இறங்கி, அடுத்த பெட் டிக்குப் போய்க் கொண்டிருந் தான். ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு றெயில் பயணம்

குப்பிழான், ஐ. சண்முகன்

கடகடவென்ற இரைச்சலுடன் புகையிரதம் விரைந்து கொண்டிருந்தது. உள்ளே கூட்டம் நெரிந்து குமைந்தது. நானிருந்த பெட்டியின் வாசற்புறக் கதவருகில் நின்று, வெளியே தெரிந்த காட்சிகளில் கண்களை மேயவிட்டுக் கொண்டிருந்தேன். கரையோரப் பகுதியில், இடைக்கிடை நெடுமூச்சு விட்டவாறே புகையிரதம் சென்றது. எனது கண்கள் கரைப் பகுதிகளைத் துளாவின. ஓடிக்கொண்டிருக்கும் காட்சிகளில் மனது தங்காமலும் ஓடாத காட்சிகளில் மனது தங்கியும் கோலம் போட்டது.

கரையில் போடப்பட்டிருந்த கருங்கல் அணைகளில், மனிதர்கள் கூட்டம், கூட்டமாக இருந்து ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். காற்சட்டை போட்ட உத்தியோகம் பார்க்கும் மனிதர்களும், சாரம் அணிந்த சாதாரண தொழிலாளர்களும், கோவணம் தரித்த மீனவரும், பெண்களும், கிழவர்களும், இளைஞரும், குமரிகளும், கிழவிகளும், குழந்தைகளும், கூட்டம் கூட்டமாக, திட்டுத் திட்டாக அமர்ந்திருந்து ஏதேதோ அளவளாவினர்கள். மனிதர்கள் பிறந்த நாள் தொடக்கமே கதைத்துக் கொண்டே இருக்கிறூர்கள்; ஆதாமும் ஏவாளும் கூடக் கதைத்திருப்பார்கள். இவர்களுக்கு எப்போதான் இக்கதை முடியுமோவென நான் எண்ணினேன்.

அவர்களில் பலர் சிரிப்பது போலவும், சிலர் உற்சாகமாகச் சத்தமிட்டுக் கதைப்பது போலவும், சிலர் நோயால் வருந்தி முனங்குவது போலவும், சிலர் அழுவது போலவும் எனக்குத் தெரிந்தது. ஆக இந்த மனித சமுதாயத்தின் பல்வேறு விதமான பல்வேறு தரப்பட்ட பிரதிநிதிகளும் அங்கு காட்சிதந்தார்கள்.

றெயில் நெடுமூச்சு விட்டவாறே விரைந்தது. ஏதோவோர் ஸ்ரேசன் நெருங்கிவிட்டதற்கு சமிக்ஞை தருவதைப் போல, கீச்சிடு குரலெடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவியது. இறுதியில், ஒரு முக்கல் முனங்கல், குலுங்கலுடன் ஒரு ஸ்ரேசனில் நின்றது. வெளியே மேய்ந்துகொண்டிருந்த என் கண்களை திடீரென உள்ளே திருப்பினேன். ஒரு நடுத்தர வயது மனிதரும், வயது இருபது மதிக்கத்தக்க, கண்டவரை மயக்க வல்ல ஒருவித கவர்ச்சிகொண்ட இளம் சிவப்புநிறச் சேலையணிந்த ஒரு பெண்ணும், என்னுடன் மோதுவதுபோல, வாசல் கதவில் பிடித்து இறங்கிச் சென்றார்கள். வேறும் பலர், அக் கொம்பாட்மென்டிலிருந்து இறங்கினார்கள். என் மனம் அப் பெண்ணிலேயே இலயித்து விட்டது. அவளும், அம்மனிதரும் பிளாட்போமில் தெரிந்த மனிதத் தலைகளுடன் தலைகளாய் வேகமாக தெற்கே சென்று மறைந்தார்கள்.

நான் அவளின் நினைவில் மயங்கிக் கிடந்தேன். வெறுமே என் கண்கள் பிளாட்போமை நோக்கிக் கொண்டிருந்தன. பிளாட்போமில் கேட்ட வடை வடை, சோடாச் சத்தங்கள், மெதுவாக என் நினைவுத்திரையில் தட்டின.

புறப்படுவதற்கு ஆயத்தமாக றெயில் கூவியது. வெளியே எட்டிப் பார்த்தேன். றெயில் வட அந்தத்திலிருந்த பெட்டியிலிருந்து காட் பச்சைக் கொடியைக் காட்டினார். றெயில் ஒரு குலுக்கலுடன் மெதுவாக ஊர்ந்து புறப்படத் தொடங்கியது. அந்தப் பெண் பிளாட்போமில் எங்காவது தென்படுவாளா என என்மனம் ஏங்கியது. மெதுவாக ஊர்ந்த றெயில் படிப்படியாக தன் துரித கதியை எட்டிக்கொண்டிருந்தது. பிளாட்போம் மறைந்தது. தூரத்தில் ஸ்ரேசன் என் கண்களிலிருந்து மறையும் வரையும், நான் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெருமூச்சுடன் தலையை உள்ளே திருப்பினேன். றெயிலில் கூட்டம் குறைந்திருந்தது. என்னைத் தவிர மற்றவர்கள் யாபேரும் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். எனக்கும் ஆசனம் கிடைக்குமோ எனத் தடவினேன்.

இரு ஜோடிக்கண்கள் குறுகுறுவென என்னையே உற்றுப் பார்ப்பதைக்கண்ட நான் துணுக்குற்றேன். திடீரென நான், தன்னைப் பார்ப்பதைக் கண்ட அவள் முகம் சிவக்கக் கீழே குனிந்தாள். அவளின் முகம் நிலா வட்டமாக என் மனதில் பதிந்தது. எலுமிச்சம் பழத்திலும் சிறிது மங்கிய நிறம் கொண்டவளாக அவள் இருந்தாள். மெல்லிய கோடுகளாக அவள் நெற்றியில் விபூதி அணிந்திருந்தாள். நெற்றியின் மையத்தில், சின்னஞ்சிறிய ஒரு கறுப்புப் பொட்டு இட்டிருந்தாள். தலையை நேர்வகிடாய் பிரித்துப் பின்னி, சிவப்பு றிபன் கட்டியிருந்தாள். வெள்ளை நிற அரைப்பாவாடையும், வெள்ளையில் பச்சைப் பூப்போட்ட சட்டையும் அணிந்திருந்தாள். வாழைத்தண்டு போன்ற அவள் அழகிய கைகளில் இரு புத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கஇளயும், ஒரு கொப்பியை யும் ஏந்தியிருந்தாள். மேலேயி ருந்த புத்தகத்தின் பெயரை வாசிக்க முயன்றேன். 'பாரதி யும் ஷெல்லியும்' என்றிருந்தது. இலக்கியம் படிக்கிருளாக்கும் என எண்ணிக் கொண்டேன். என் கண்கள் அவளைவிட்டகல மறுத்தன.

மீண்டும், தலையைத் தூக்கி என்னைப் பார்த்த அவள், நான் தன்னையே பார்ப்பதைக் கண்டு தலையைக் கவிழ்த்துக் கொண் டாள்.

நான் புன்முறுவலுடன் தலையை வெளியே திருப்பிக் கொண்டேன். என் மன இயல் பை எண்ணி வியந்தேன். சற்று நேரத்தின் முன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளில் மயங்கி, அவளை இன்னுேர் முறை பார்க்க மாட் டேனே என்று தவித்த நானு, இப்போது இப் பெண்ணைப் பார்த்து, இவள் அழகை அணு அணுவாக இரசித்து, இவளையே பார்க்க வேண்டும் போலத் தவித்துக் கொண்டிருக்கிறேன்?

என் மனம் அவளைப் பார்க் குமாறு தூண்டியது.

என் மனத்தின் இப்போக் கை எப்படியும் அடக்குவதென்று தீர்மானித்தேன். மனதை அவ ளின் நினைப்புக்களில் இலயிக்க விடாமல் வலிந்து திருப்ப முயன்றேன்.

மாலை நேரத்து இளம் வெய் யில் காய்ந்து கொண்டிருந்தது. கடல்நீர் வெயிலில் பளபளத் தது. வெண்ணிற அலைகளில் பட்ட வெயில் என் முகத்திற்கு நேரே பிரதிபலித்துக் கொண்டி ருந்தது. தூரத்தே அடிவானத் திற்கு இப்பால் மங்கலாய், சிறிய புள்ளியாய் ஒரு கப்பல் விரைந்து கொண்டிருப்பது தெரிந்தது. கரைக்கு அண்மையில் வடமேல் பக்கத்தில் பாய்விரித்த பட கொன்று காற்றின் போக்கிற்கு அமைய அசைந்து கொண்டிருந் தது. அதில் இரண்டு மனிதர் கள் இருப்பது போல மங்கலாக இரு புள்ளிகள் தெரிந்தன. ஆணும், பெண்ணுமாக இரு தம்பதிகள், புகையிரத வீதியோ ரத்தில் றெயிலேயே பார்த்த வாறு நின்றனர். அவர்களுக் கிடையே நின்ற மூன்றுவயது மதிக்கத்தக்க சிறுவன், றெயி லைப் பார்த்து, கெக்கட்டமிட் டுச் சிரித்தவண்ணம் கையைக் காட்டினுன்.

றெயில் ஒரு குலுக்கலுடன் அடுத்த ஸ்ரேசனில் நின்றது.

என்னையே ஓரக்கண்ணுல் பார்த்துக்கொண்டிருந்த அவள் ஒரு புன்னகை பூத்தவண்ணம், அப்பாலே திரும்பி வானத்தைப் பார்த்தாள்.

எனக்குச் சிரிப்பு வந்தது. அதை வலிந்துஅடக்கிக்கொண்டு நான் இருப்பதற்காக ஓரிடத் தைத் தேடினேன். அவளுடன் எப்படியாவது பேசித்தான் தீர்வது என்று சங்கல்பம் பூண்டு கொண்டேன்.

நல்ல வேளையாக அவளின் அருகிலேயேயே, அவளை ஒட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுற்போல, ஒரு ஆள் இருக்கத் தக்க இடம் காலியாக இருந்தது அவள் வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். தயங்கியவாறு சென்று அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டேன்.

அவள் அலட்சியமாகத் திரும்பி என்னைப் பார்த்தாள்! இதை அவள் எதிர்பார்த்திருந்தவள் போலத் தென்பட்டாள். அவள் கண்கள் ஒருவித கிறங்க வைக்கிற அழகைத்தந்து மின்னின. அவளுடன் எனது உடல் உராஞ்சுவதைப் பொறுக்காதவள் போல மெல்ல நெளிந்து கொண்டாள். என்னுடன் ஏதேதோ பேசத் தவிப்பவள்போல அவள் காணப்பட்டாள்.

வண்டி ஒரு குலுக்கலுடன் மீண்டும் புறப்பட்டது. அவள் என்னை அலட்சியம் செய்பவள் போல பழையபடியே ஜன்னலூடாக அப்பாலே தெரிந்த வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் ஒரு பெருமூச்சுடன் என் கண்களை வண்டியினுள்ளே உலாவவிட்டேன். என் பெருமூச்சினுல் தன் கவனம் கலைந்தவளைப்போல அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள். நான் அவள் பார்ப்பதைக் கவனியாதவன் மாதிரி வண்டிக்குள்ளேயே எதையோ வெறித்துப் பார்ப்பதாகப் பாசாங்கு செய்தேன். அவள் என்னை தலையில் இருந்து உள்ளங் கால்வரை அவதானிப்பதை நான் என் ஓரக்கண்களால் கண்டும் காணுதவன் போலிருந்தேன்.

குழந்தையொன்று அவலக் குரலெழுப்பி அழுதது. எனக்கு முன்னுலிருந்த சிற்றில் இருந்த அந்த இளம்தாய், அதை மார்போடு அணைத்து தூங்க வைக்க முயன்றுள். அவளின் அணைப்பின் இதத்தில் சுகங்கண்ட குழந்தையின் அழுகை ஓய, நான் அப்பால் என் கவனத்தைச் சற்றுத் திருப்பினேன். வண்டியில் கூட்டம் கூடியிருந்தது. கடந்த ஸ்ரேசனில் இரண்டு, மூன்று பேர்கள் வண்டியில் புதிதாக ஏறியிருப்பார்களென எண்ணினேன். நான் நின்ற இடத்தில் ஒரு வாலிபன் நின்று கொண்டு ஏதேதோ கனவுகளில் மூழ்கியிருந்தான். அப்பால் ஒரு மீனவன் தன் வெறுமையான கூடையைக் கவிழ்த்து அமர்ந்திருந்தான். சுவிப் ரிக்கெக் விற்கும் பையனொருவன் தன் சுவீப் ரிக்கெற்றுக்கள் கொண்ட பல கையை கையில் பிடித்தவண்ணம் கடற்கரையை வேடிக்கைபார்த்துக் கொண்டு நின்றுன். அவனுக்கு அப்பால் இருந்த ஒரு தாடிக்காரக் கிழவன் என்னையும் அவளையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவி ஒரு நவீன சினிமாப்பாடலைப் பாடிய வண்ணம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள். அவள், எனக்கும், அவளுக்கும் முன்னுல் வந்து நின்றுகொண்டு அந்தப் பாட்டைப் பாடி கையை நீட்டினுள்.

நான் எனது காற்சட்டைப் பையில் கையை விட்டுத் துளாவினேன். ஒரு ஐம்பது சதக் குத்திதவிர வேறென்றும் கையில் தட்டுப்படவில்லை. அவள் தனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பக்கத்தில் இருந்த கறுப்பு நிறக் கைப்பையை எடுத்து நாசூக்காகத் திறந்து, ஒரு பத்துச் சதக் குத்தியை எடுத்து பிச்சைக்காரியின் கையில்போட்டாள். அவள் அந்தக் கைப்பையை வைத்திருந்ததை நான் இதுவரையில் காணவில்லை.

பிச்சைக்காரி என்னைப் பார்த்தாள். நான் இல்லைப் போ என்று சைகை செய்தேன். அவளுக்குப் பக்கத்தில் இருந்து அப்படிச் செய்ய எனக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனுல் என்னுல் வேறொன்றும் செய்ய முடியவில்லை. பெண்களின் கவனத்தை தம்பால் கவர வேண்டுமென்பதற்காக தம் கையிலிருக்கும் எதையும் கொடுத்துவிடும் சில 'மன்மதக் குஞ்சுகளை'ப் போல அந்த ஐம்பது சதத்தைக் கொடுக்க எனக்கு மனம் வரவில்லை.

அவள் என்ன நினைத்தாளோ எனக்குத் தெரியாது. ஒரு விதமாக என்னைத் திரும்பிப் பார்த்தாள். நானும் பார்த்தேன். மௌனமாக தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். பழைய செந்தழிப்பு முகத்தில் தென்படவில்லை. பிச்சைக்காரி அப்பால் சென்று தன் பிலாக்கணத்தை மீண்டும் ஆரம்பித்தாள். நான் மனத்தினில் அப் பிச்சைக்காரியைத் திட்டினேன்.

வண்டி, அடுத்த ஸ்ரேசனில் நின்று விட்டுப் புறப்பட்டது. பிச்சைக்காரக் கிழவியும் சுவிப்ரிக்கெட் பையனும் இறங்கியிருந்தார்கள். குழந்தையை வைத்திருந்த பெண் அதை அணைத்தவண்ணம் பின்னுக்குத் தலையைச் சாத்தி அமர்ந்திருந்தாள். கூடைக்கார மீனவன் அதில் இருந்த வண்ணம் அப்போ பிரசித்தமாயிருந்த ஒரு சிங்களப் பாடலை முணுமுணுத்துக்கொண்டிருந்தான். வாசலில் நின்ற வாலிபன் முன்னைப் போலவே ஏதோ கனவில் ஆழ்ந்திருந்தான் தாடிக்காரக் கிழவன் ஆழ்ந்த தூக்கத்தில் இலயித்திருந்தான்.

அவளைப் பார்த்தேன்; அப்பாலே தெரிந்த காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்தவள் போல, வெளியேயே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் அழகிய கைகள், அந்தப் புத்த கங்களையும், கொப்பியையும் இறுகப் பற்றியிருந்தன. இப்போது, அப்பற்றுதலில் அவளின் கைப்பையும் சேர்ந்திருந்தது.

புகையிரதம் கரைப் பகுதியை விட்டு நாட்டுக்குள் புகுந்து ஓடத் தொடங்கியது. அழகிய வயல் பிரதேசங்களுக்கூடாக நெளிந்து, வளைந்து செல்லும் தண்டவாளத்தின் மீது அது வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. இருண்டு வரும் மங்கிய வெளிச்சத்தில், அப்பகுதி அழகிய சோபைபெற்று மிளிர்ந்து கொண்டிருந்தது. நானும் அவளுடன் சேர்ந்து வெளியழகை நோக்கிக் கொண்டிருந்தேன்.

வழியிலிருந்த ஆற்றுப் பாலத்தில் பயங்கர சத்தத்தை எழுப்பிக் கொண்டே புகையிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் இரண்டு பெண்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள். பாதையின் அருகினில் பச்சைப் பசேலென்ற நெல் வயல்களும் வாழைத் தோட்டங்களும் காணப்பட்டன.

இயற்கையே பார்த்துப் பார்த்துச் சலித்த நான் மீண்டும் என் கவனத்தை அவள் மேல் திருப்பினேன். அவளின் கோலத்தில் எதுவித மாற்றமும் இல்லை. வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'இந்தப் புத்தகத்தை ஒருமுறை தருவீர்களா' என்றேன். எனது குரல் மெல்லிய ஸ்தாயியில் ஒலித்தது. அவள் ஏதோ பிரமையிலிருந்து விடுபட்டவள் போல ஒருமுறை அசைந்து கொடுத்தாள். பின்னால் திரும்பிப் பார்க்காமலே தன் பின்னலில் ஒன்றைத் தூக்கி முன்பக்கம் போட்டு அதை அழகுபடுத்தினாள். அவள் தன் பின்னலைத் தூக்கி முன்னால் போடும்போது அது என்னைத் தழுவி அணைத்துச் சென்றது. அவள் என்னைத் தழுவ மாட்டாளோவென ஏங்கினேன். நான் கேட்ட கேள்விக்கு அவளிடமிருந்து பதில் வரவில்லை. அது அவளின் காதில் விழவில்லைப் போலும் என எண்ணினேன்.

புகையிரதம் ஒரு குகையில் புகுந்து ஓடியது. அதனால் புகையிரதத்தினுள்ளே ஒரு செயற்கையான இருள் பரந்திருந்தது. அப்போது அவள் தன் முகத்தை உள்ளே திருப்பி இருப்பாளென்று நினைக்கிறேன். புகையிரதம் குகையை விட்டுக் கழிந்ததும் அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். நானும் பார்த்தேன். பார்வையும் பார்வையும் முட்டி மோதிச் சிதறின. அவள் நாணம் மிக்க ஒரு புன்முறுவலுடன் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்.

கூடையிலிருந்த மீன்காரக் கிழவன் 'ஆதரே மம ஆதரே' (நேசிக்கிறேன் நான் நேசிக்கிறேன்) என்று முணுமுணுத்தான் தாயின் அணைப்பிலிருந்த குழந்தை கையைக் காலை ஆட்டி விளையாடியது. வாசலில் நின்ற இளைஞன் ஏதோ நினைவில் சிரித்துக் கொண்டான்.

நான் அவளைப் பார்த்து 'இந்தப் புத்தகத்தை ஒருமுறை தருவீர்களா?' என மீண்டும்வினவினேன். அவள் கைகள் அசைந்தன. அந்தப் புத்தகத்தை எடுத்து பவ்வியமாக என்கையில் தந்தாள். அப்போது கீழேஇருந்த புத்தகத்தை அவதானித்தேன். 'இரு மகா கவிகள்' - கலாநிதி க. கைலாசபதி என்றிருந்தது. நான் நினைத்தது சரிதான். இவள் இலக்கியத்தில் ஆழ்ந்த விருப்பம் கொண்டவள் தான் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

புத்தகத்தின் அட்டையைப் புரட்டினேன். 'பிரமிளா' என்ற பெயர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது. புத்தகத்தின் அடுத்த பக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் புரட்டிக் கொண்டே 'உங்கள் பெயர் பிரமிளாவா?' என்றேன்.

ஆமாம் என்று தலையசைத்த அவள், 'உங்கள் பெயர் என்ன' வென்றாள் தொடர்ந்து.

'இளங்கோ' என்றேன்.

'ஓ! சிலப்பதிகாரம் எழுதியவரின் பெயரையே கொண்டிருக்கிறீர்களே' என்று கூறிச் சிரித்தாள்.

நான் புத்தகத்தின் பக்கங்களைத் தட்டினேன். ஓர் எழுத்தையாதல் படிக்க மனம்வரவில்லை. அவள் நான் செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'உங்களுக்குச் சிங்களம் தெரியுமா?' எனத் திடீரென வினவினேன். அப்போது நான் உத்தியோகத்தில் சேர்ந்த புதிதாகையால் சிங்களத்தைப் படிக்கத் தொடங்கி இருந்தேன். அதனால் அப்போ நான் சந்திக்கிறவர்களையெல்லாம் சிங்களம் தெரியுமோ என்று கேட்பது வழக்கமாகவிருந்தது.

அவள் சொன்னாள். 'எனக்கு இலக்கியத்தில் ஆழ்ந்த பற்று, தமிழிலுள்ள இலக்கியத்தைப் படித்துக்கொண்டிருந்த நான் தற்செயலாக ஒருநாள் 'வீடு' என்றதோர் கவிதையைப் படிக்க நேர்ந்தது. அந்த அருமையான கவிதையை ஒரு சிங்களக் கவிஞன் எழுதியிருந்தார். நான் அதன் தமிழ் மொழிபெயர்ப்பையே படித்தேன். அன்றிலிருந்து நான் சிங்களம் படித்து சிங்கள இலக்கியங்களைப் படிப்பதென்று முடிவுசெய்தேன். இன்று எனக்குச் சிங்களம் பெருமளவு தெரியும்'.

'அப்படியானால் எனக்குச் சிங்களம் படிக்க உதவுகிறீர்களா?' என்றேன் நான்.

அவள் பலத்துச் சிரித்தாள். 'நாம் இப்போ இருப்பது றெயிலில்' என்றாள். தொடர்ந்து 'இப்பிரயாணத்தில் நானும் நீங்களும் நண்பர்கள். பின் நான் யாரோ நீங்கள் யாரோ' என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டாள்.

எனக்கு எங்கிருந்துதான் அவ்வளவு துணிவு வந்ததோ தெரியாது. நான் சொன்னேன்: 'இந்த றெயில் பயணத்தில் சந்தித்த உன்னை, நான் என் வாழ்க்கைப் பயணத்திலேயே மறக்க முடியாது பிரமிளா; நீ என் மனதில் ஏதோ ஒரு விதத்தில் நீங்காத இடம் பிடித்து விட்டாய்.'

அவள் மௌனமாகச் சிரித்தாள். அவள் கண்களில் கண்ணீர்த் துளிகள் பளிச்சிட்டன; என்ன நினைத்தாளோ தெரியாது என் மார்பில் முகத்தைப் புதைத்து அழுதாள். நான் அவள் தலையைக் கோதினேன்.

தாடிக்காரக் கிழவன் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்றவர்களை நான் கவனிக்கவில்லை.

றெயிலின் வேகம் குறைந்தது. தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்ட அவள் 'நான் இவ்வளவு நாளும் எதையோ எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திருந்தேன், அது இங்கே தான் கிடைத்தது' என்று என் மார்பைத் தொட்டுக் காட்டினாள்.

பழையபடியே கலகலப்பாக அவள் மாறினாள். 'என் புத்தகத்தைத் தருவீர்களா? நான் இறங்கவேண்டிய ஸ்ரேசன் வந்துவிட்டது'

நான் புத்தகத்தை மூடி அவளிடம் கொடுத்தேன்.

றெயில் நின்றுவிட்டது,

அவள் இறங்கி என்னைப் பார்த்துச் சொன்னாள். 'நீங்கள் சொன்னதுபோல இந்த றெயில் பயணத்தில் சந்தித்த உங்களை இந்த வாழ்க்கைப் பயணத்திலேயே மறக்கமுடியாது. ஏனென்றால் நான் எதிர்பார்த்ததை உங்களிடமே பெற்றேன். வாழ்க்கை என்பதே எதிர்பார்ப்புகளில் தானே தங்கியுள்ளது' அவள் கைகளைக் கூப்பி என்னிடம் விடைபெற்றாள்.

அவளின் அழகிய உருவம் என் கண்களிலிருந்து மறைந்துகொண்டது. றெயில் சோகமயமான குரலெடுத்துக் கூவிக்கொண்டு புறப்பட்டது. அவள் கைகளை அசைத்து விடைகொடுத்தது, கண்ணீரினால் நனைந்திருந்த என் கண்களுக்கு மங்கலாகத் தென்பட்டது. நானும் பதிலுக்குக் கைகளை அசைத்தேன்.

றெயில் நீண்ட தூரம் வந்துவிட்டது. உள்ளே கவனத்தைத் திருப்பினேன். கூடைக்கார மீனவனும் குழந்தையை வைத்திருந்த இளம்தாயும், வாலிபனும் இறங்கியிருந்தார்கள். தடிக்காரக் கிழவன் என்னையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்

கண்களை வெளியே திருப்பினேன். மேகத் திரையினுள்ளே மூன்றாம் பிறைச் சந்திரன் உதயமாக எத்தனித்துக் கொண்டிருந்தான்.


றெயில் தன்பயண இலக்கை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. ★




எங்கும் கிடைக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தில் மிக வேகமாகத் தயாராகி வருகின்றது

வி. எஸ். ரி. பிலிம்ஸாரின்

# குத்துவிளக்கு

மூலக் கதையை தயாரிப்பாளர் துரைராஜா எழுத, ஈழத்து ரத்தினம் வசனம், பாடல்களை அமைத்துள்ளார். முத்துசாமி இசையமைக்கிறார்.

லீலா, ஆனந்தன், எம். எஸ். ரத்தினம். பேரம்பலம், ராம்தாஸ், ராஜகோபால், சித்திரா. சோ. நடராஜா, ஸ்ரீசங்கர் ஆகிய நாடக, திரைக் கலைஞர்கள் நடிக்கின்றனர்.

அமெரிக்க டெலிவிஷன் ஸ்தாபனத்தின் செய்திப்பட ஒளிப் பதிவாளரும், சிங்களப் படங்களை நெறிப்படுத்தியுள்ளவருமான டபிள்யூ. எஸ். மகேந்திரன் இப்படத்தை நெறிப்படுத்துகின்றார்.

சிங்களக் கிராமியக் கதை

தமிழில்: ஈ. ஆர். திருச்செல்வம்

# புத்தியுள்ள இடையன்

முன்னொரு காலத்தில் நாடோடி ஒருவன் ஊர் ஊராகச் சுற்றி கடைசியாக ஒரு நகரத் தருகே வந்து சேர்ந்தான். தெரு வழியாக நடக்கும்போது உள்ளூர் வாசி ஒருவனைச் சந்தித்த நாடோடி, 'இந்நாட்டில் அரசாட்சி எப்படி?' என்று வினவினன். உள்ளூர்வாசி 'குறை ஏதுமில்லை; நன்ருகத்தான் அரசாட்சி நடை பெறுகின்றது' என்று பதிலுரைத்தான்.

இதைக்கேட்ட நாடோடி, 'நல்லது. அப்படியாயின் இவ்வூரின் மத்திய இடம் எது? இவ்வூருக்குத் தெரியக்கூடிய ஆகாயத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை எத்தனை? தேவாதி தேவனின் தொழில் என்ன?- இக் கேள்விகளுக்கான விடையை உங்கள் அரசனுல் கூறமுடியுமா?' என்று கேட்டுவிட்டு வந்தவழியே திரும்பிவிட்டான்.

இச் செய்தி நகரமெங்கும் பரவி அரசனது காதுகளுக்கும் எட்டிற்று. கேள்விகளுக்கான விடையை அரசன் சிந்திக்கலானன். தனிமையை நாடினன். தனிமையில் பலவாறு சிந்தித்தான். எவ்வளவுதான் முயற்சித்தாலும் கேள்விகளுக்கான விடையைத் தெரிந்து கொள்ள அரசனுல் முடியவில்லை.

இக் கேள்விகளுக்கான பதிலைக் கூறும்படி முதலமைச்சரிடம் கேட்டான். சற்றுச் சிந்தித்த பின் முதலமைச்சர் 'எனக்குப் பதில் கூறமுடியாது' என்று கூறிவிட்டார். பதில் கூறமுடியாத முதலமைச்சரால் பிரயோசனம் இல்லை. கழுத்தை வெட்டும்படி உத்தரவிட்டான் அரசன். கட்டளை நிறைவேற்றப் பட்டது. இப்படியே அரச சபையிலுள்ள அதிகாரிகளும் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

இறுதியில் அரசன் சபா மண்டபத்துக்கு வந்தான் இராஜ குருவையும், புரோகிதர்களையும் அழைத்தான். வினுக்களுக்கு விடைதருமாறு அவர்களைப் பணித்தான்.

புரோகிதர்கள் 'இது முக்கிய மான விஷயமாயிற்றே. ஒருநாள் அவகாசம் தந்தால் மறுமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி விடுவோம்' என்றனர். அரசனும் சம்மதித்தான். புரோகிதர்களும் வீடுநோக்கி புறப்பட்டார்கள்.

வீட்டுக்குச் சென்றதும் சிந்தித்தார்கள். வினுக்களுக்கான விடையைக் காண முடியவில்லை; தமது உயிர் போகப்போகிறதே என்ற கவலையால் உண்ணுது, உறங்காது ஒருபக்கமாக அமர்ந்திருந்தார்கள்.

இராஜகுருவும், புரோகிதர்களும் கவலையுற்ற நிலையில் இருப்பதை இடையன் கண்ணுற்ருன். எஜமானின் கவலைக்குக் காரணம் காணத் துடித்தான். அவரின் முன்னுல் பலதடவைகள் அங்கும் இங்குமாகச் சென்ருன். ஆனுல், புரோகிதரோ அவனைத் தலைநிமிர்ந்தும் பார்க்கவில்லை.

இடையன் மெதுவாக அருகில் சென்று, 'குருவே ஏன் இவ்வளவு கவலையுடன் இருக்கிறீர்கள்?' எனக் கேட்டான்.

இதைக்கேட்ட இராஜகுரு, 'சிறுவனே இவ் ஊர் அரசனின் முக்கியமான சில கேள்விகளுக்குப் பதில்கூறும் பொறுப்பை ஏற்றுள்ளோம். இதுவரை பதில் கூறமுடியாதவர்களை அரசன் கொன்றுவிட்டான். நாளை எங்கள் தினம். நான் சாவதற்குப் பயப்படவில்லை. கேள்விகளுக்குப் பதில் தரமுடியவில்லையே என்பதுதான் கவலை' என்ருர்.

'குருவே பதில் காணமுடியாத அவ்வளவு பயங்கரமான அக்கேள்விகள் என்ன?' என்று இடையன் பணிவுடன் கேட்டான்.

மூன்று கேள்விகளையும்கூறிய புரோகிதர், 'நான் இறப்பது பற்றிக் கவலையில்லை. நீ எனது மந்தைகளை வைத்துக் கொண்டு சுகமாக வாழ். நாளைய தினம் எத்தனையோ உயிர்கள் மடியப் போகின்றனவே' என்று கூறிய வாறு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'குருவே! இதுவா கேள்வி? இதில் அவ்வளவு தூரம் சிந்திக்க எதுவும் இல்லை. நாளை சபா மண்டபத்துக்குச் செல்லும் போது என்னையும் அழைத்துச் செல்லுங்கள். இக் கேள்விகளுக்கான சரியான விடையைக் கூறி விடுகிறேன்' என்ருன்.

இரவு விடிந்ததும் புரோகிதர் இடைச் சிறுவனையும் அழைத்துக்கொண்டு சபா மண்டபத்துக்குச் சென்ருர். அங்கு அரசரும் மற்றைய புரோகிதர்களும் அமர்ந்திருந்தார்கள். இராஜகுரு தனக்கென ஒதுக்கிய இடத்தில் அமைதியாக அமர்ந்தார்.

அரசன் எல்லேரையும் ஒரு முறை பார்த்துவிட்டு 'எனது வினுக்கள் மூன்றுக்கும் விடை தெரிந்து வந்தீர்களா?' எனக் கேட்டான். மற்றவர்கள் பதில் கூறிவிடமுன்பு இராஜகுரு எழுந்து நின்று, அரசனைப் பார்த்து புன்னகை செய்த வாறே 'அரசே! கேள்விகள் மிகவும் அற்பமானவை; இதற்கான பதில் நான்தான் கூற வேண்டுமா? எனது இடையனிடம் கேட்டால் பதில் தருவான்' என்று கூறி அமர்ந்தார்.

அரசன் இடைச் சிறுவனை அழைத்து 'நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியான விடை தர வேண்டும். இல்லையேல் உன் கழுத்து வெட்டப்படும்' என்று கூறிவிட்டு முதலாவது கேள்வியைக் கேட்டான்.

'இந்த ஊரின் சரியான மத்திய இடம் எது?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு தன் கையில் இருந்த ஆடு மேய்க்கும் கோலை ஒரு இடத்தில் ஊன்றி, இந்த இடம்தான் இந்த ஊரில் ஒரு மையம். நம்பாவிட்டால் நாலா பக்கங்களையும் அளந்து பாருங்கள்' என்ருன்.

'சரி இதை நான் நம்புகிறேன். இதோ அடுத்த கேள்வி: இவ் ஊரில் வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை என்ன?'

சிறுவன் தன் இடையில் இருந்த ஆட்டுத்தோலை நிலத்தில் விரித்து விட்டு, அரசனைப் பார்த்து, 'மகாராஜவே! இதோ இந்த ஆட்டுத்தோலில் உள்ள உரோமங்களின் எண்ணிக்கை தான் நமக்குத் தெரியும் இவ் வானத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை. நான் சொல்வதை நம்பாவிட்டால் நட்சத்திரங்களையும், உரோமங்களையும் எண்ணிப் பாருங்கள். சரியாகவே இருக்கும்' என்று கூறினுன்.

மன்னன் சிறிது சிந்தித்தான். தோலில் உள்ள உரோமங்களை எண்ணுதல் முடியாத காரியம். அப்படி எண்ணிவிட முடியுமாயின் வானத்தில் உள்ள நட்சத்திரங்களையே எண்ணிவிடலாமே.

பதிலைப் புரிந்து கொண்ட அரசன், 'ஆம்; சிறுவனே! நீ சொன்னதை நான் நம்புகின்றேன். இரண்டிலும் நீ வெற்றி பெற்ருய். மூன்ருவது கேள்விக்கும் சரியான பதிலைக் கூறிவிட்டால் நீயும் இங்கு குழுமியுள்ள புரோகிதர்களும் மற்றவர்களும் உயிர்தப்பிவிடுவார்கள்' என்று கூறியவாறு மூன்ருவது கேள்வியாகிய, 'சுவர்க்கத்துக் கதிபதியாகிய தேவாதி தேவன் செய்யும் வேலை என்ன' என்று கேட்டான்.

இதைக் கேட்ட சிறுவன், அரசே! 'இக்கேள்விக்கு அவ்வளவு இலகுவாகப் பதில் சொல்ல முடியாது' என்ருன்.

'அப்படியாயின் எப்படிச் சொல்ல முடியும்?' என்ருன் அரசன்.

சிறுவன் சற்று சிந்திப்பவனைப் போல் பாசாங்கு செய்துவிட்டு, 'மன்னு! எனக்கு அரச உடை அணிந்து, சிம்மாசனத்தில் இருத்தி முடி சூட்டினுல் தான் சொல்லமுடியும். இல்லாவிட்டால் முடியாது' என்று இடையன் கூறிவிட்டான்.

பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவினுல் அரசன் இடையனின் விருப்பப்படியே செய்தான். முடிசூட்டப்பட்டு சிம்மாசனத்தில் அமர்ந்த இடையன் அங்கு குழுமி இருந்தவர்களைப் பார்த்து, அரசனைச் சுட்டிக்காட்டி, 'இங்கே நிற்கும் இம் மனிதன் காரணமின்றி மனிதர்களைச் சிரச்சேதம் செய்த குற்றத்துக்காக இப்பொழுதே இழுத்துச் சென்று சிரத்தைக் கொய்து விடுங்கள்' என்று கட்டளையிட்டான். சிம்மாசன உத்தரவானதால் தடையின்றி நிறைவேற்றப் பட்டது.

பின்னர் இடையன் அரசனுகவும், புரோகிதர்கள் மந்திரிகளாகவும் அரசாட்சியை ஒழுங்காக நடாத்தி வந்தார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைவாணியின்

# வெள்ளிவிழா

கலை, கலாச்சாரத் துறைகளில் ஈழத்தின் தனித்துவத்தை 19-10-70-ம் திகதி யாழ். மாநகர மண்டபத்தில் நடைபெற்ற இசைவாணி திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் பிரதிபலித்தன.

தமிழக வித்துவான்கள் பங்குபற்ருத இசைவிளாக்கள் சிறப்படைய மாட்டா, மக்கள் ஆதரவைப் பெறமாட்டா என்ற தாழ்வு மனப்பான்மையைத் தலைகீழாக மாற்றி நம்மவர்களாலும் முதல்தரமான கச்சேரிகளை நடத்த முடியும் என்பதை நடைமுறையில் செய்து காட்டி ஈழத்துக் கலைஞர்களுக்கு எல்லாம் முன்னோடியாக விளங்கியவர் திருமதி சரஸ்வதி பாக்கியராஜா. தமக்கென ஓர் இரசிகர் குழாத்தைத் தேடிக்கொண்ட இசைவாணியின் இசை இன்பத்தை நுகராதவர்கள் ஈழத்தில் இல்லையென்னும் படியாக புகழ் ஏணியின் உச்சத்தில் வீற்றிருக்கும் அவரது வழியில் ஒரு இசைப் பரம்பரையே உதயமாகிவிட்டிருப்பதைக் குறித்து நாம் பெருமையடையலாம்.

ஈழத்தில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் எவ்விதம் தனித்துவத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ அதே போல், இசையிலும் எமது கலைஞர்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்டுவதில் பெருமையடைகிருர்கள் என்பதை வெள்ளி விழா நிகழ்ச்சிகள் பளிங்குபோல் எடுத்துக் காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்து இசைத் துறையைத் தெரிந்து கொண்ட திருமதி சரஸ்வதி பாக்கியராஜா, தம் இளம் வயதில்தானே நேத்தாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களது இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து இந்திய விடுதலைக்காகப் போராடியவர். விடுதலை உணர்விற்குத் தூரகிழக்கு நாடுகளில் வேகம் கொடுப்பதற்கு இசையை நன்கு பயன்படுத்திய அவரது கச்சேரிகளில் இந்திப் பாடல்களைப் பாடி நேதாஜி அவர்களின் பாராட்டையும் பெற்றவர் இசைவாணி.

தாய்நாடு திரும்பிய இவ் இசை மேதை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இசை ஆசிரியராக இருந்து 25 ஆண்டுகள் சேவை ஆற்றியிருக்கிறார். புகழ்பூத்த இசைவாணியின் வெள்ளி விழா இசைத் துறையில் யாழ்ப்பாண வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பதில் ஐயம் இல்லை.

யாழ்ப்பாணம் மாநகர துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த மேற்படி வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய பிரபல எழுத்தாளரான 'சொக்கன்' அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் சங்கீத வித்துவான்களது கவனத்திற்கு உரியன. இசையை வளர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு தமிழ் அவையில் தெலுங்குக் கீர்த்தனங்களைப் பாடி மகிழ்வதால் யாருக்கு என்ன நன்மை? நாட்டில் இவர்களால் இசையை வளர்க்க முடிந்ததா? அல்லது இரசிகர்களையாவது வளர்த்துவிட்டதா? என்று அவர் வினவியபோது பலத்த ஆரவாரமும், கையொலியும் மண்டபத்தில் இருந்து எழுந்தது. தேவாரம், திருவாசகங்களை, பாரதியார், தேசிகவிநாயகம்பிள்ளை ஆகியோர் கீர்த்தனங்களைப் பாடினால் அர்த்தத்தை புரிந்துகொண்டு இசையோடு மக்கள் ஒன்றிவிடுவார்கள். அதை விடுத்தால் யாதும் பயன் விளையப்போவதில்லை என்று அடித்துக்கூறினார் சொக்கன். இனிமேலாவது சொக்கனின் உரைப்படி நடந்து தமக்கும் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் எமது வித்துவான்கள் புகழ் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று நிலைக்கத் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வோம் வாரீர்!.

— யாழ்வாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசுக் குழுவும்

ஏ. பி. என்.

# அதன் இவ்வருடத் தேர்வும்

மனித கலாசாரக் களஞ்சியத்தில் மற்றுமொரு செல்வமாகத் திகழ்கிற ஒரு இலக்கியப் படைப்புக்குப் பரிசு ஒன்று வழங்கப்படுகிற போது, அனைத்து உலகமும் அதனை ஏகமனதாக வரவேற்கத் தயங்காது. ஆனால் 1970 அக்டோபர் 8 அன்று அறிவிக்கப்பட்ட இலக்கியத்துக்கான நோபல் பரிசு நல்ல நோக்கத்துடன் வழங்கப்படுவதாகத் தோன்றவில்லை. ரசனைக் குறைவுடனும் கெட்ட எண்ணத்தோடும் கிளப்பிவிடப்பட்ட பரபரப்புச் செய்தியாகவே படுகிறது அது. நோபல் பரிசுக் குழுவின் அபிப்பிராயத்தை மதிக்கக் கூடியவர்கள், அது இவ்வருடம் பரிசுக்காகத்தேர்ந்தெடுத்துள்ள பெயரைக் கண்டு ஆச்சர்யப்படுகிறார்கள். அது மட்டுமல்ல; பரிசுத் தேர்வுக்கான நோக்கங்கள் பற்றிய அறிவிப்பில் காணப்படுகிற தெளிவின்மையும் அவர்களுக்கு வியப்புத்தருகின்றது. சோவியத் நாட்டுக்கு எதிரான பிரசார சக்தியின் வேகத்தின் முன்னால் நோபல் பரிசுக் குழு செயலற்றுப் போனது என்பதை மூடிமறைப்பதற்காக, ஒரு எழுத்தாளனின் ஆத்ம சக்தியைப் பற்றி பெரிதாகப் பேசும் வார்த்தைகளைக் கொட்டி முழக்குகிறது அது.

சோல்ஷெனிட்ஸினது எழுத்துக்களில் இலக்கிய நயமும் இல்லை, அரசியல் உத்வேகமும் கிடையாது என்பதை உலக மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ரொம்ப காலம் தேவைப்படாது. 'சோவியத் இலக்கிய விற்பன்னர்கள்' என்று சொல்லிக் கொள்கிற சிலபேர், அகில உலகப்புகழ்பெற்ற ரஷ்ய, சோவியத் உயரிய இலக்கியங்களைப் படைத்துள்ள சிருஷ்டி கர்த்தாக்களுடன் சோல்ஷெனிட்ஸின் பெயரையும் இணைத்து எழுதுகிறார்கள். இப்படி எழுதப்படுகிற ஒப்புவமை பெரும் நிந்தனையேயாகும். இவ்விதமான ஒப்புவமைகள் நியாயமானவைதான் எனும் நம்பிக்கை இவற்றை எழுதுகிற 'விற்பன்னர்க'ளுக்கே இருக்குமா என்பது சந்தேகம்தான். தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வதற்கு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சோவியத் இனமொழிச் சிறுகதைகள் ரூ. 1-75
- சோவியத் சிறுகதைகள் 2-50
- மூன்று ஆண்டுகள் (நாவல்) — அண்டன் செக்கவ் 1-75
- ஏகாதிபத்தியம் - முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் — லெனின் 1-75
- கம்யூனிஸ்ட் அறிக்கை — மார்க்ஸ், எங்கல்ஸ் 1-00
- நாட்டுப்புற ஏழைமக்களுக்கு — லெனின் 1-00
- மார்க்ஸையும் எங்கல்ஸையும் பற்றிய நினைவுக் குறிப்புகள் 4-75
- அரசு — லெனின் சதம் 0-25
- சிறுவர் சிறுகதைகள் 0-90

விபரங்களுக்கு:

**மக்கள் பிரசுராலயம்** 124, குமாரன் ரத்தினம் ரோட், கொழும்பு-2

கிளை: 91, கொட்டாரோட், கொழும்பு-8

# M. இராசரத்தினம்

செந்தமிழ்த் தோட்டம்

(பாம் ஸ்கூலுக்கருகாமையில்)

**பலாலி ரோட், திருநெல்வேலி.**

எங்களிடம்:

சகல இன ஒட்டு மாங்கன்றுகள், ஒட்டுத்தோடை, எலுமிச்சை, ஊர் எலுமிச்சை, பலா, மாதுளை, நெல்லி, அரந்தி, பியஸ், திராட்சைக் கன்று, யம்பு நாவல், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியான ரோஜாச் செடி வகைகள், மற்றும் பூக்கன்றுகள், பூவிதைகள், கத்தரி, கறிமிளகாய், தக்காளி, ஊர்மிளகாய், இலைக்கோவா, பீட்றூட், முட்டைக்கோவா, பூக்கோவா, சலாஸ் கன்றுகளும், விதைகளும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் கவனிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Ceylon

touch
the
key
to
better
efficiency
use

# ASOKA

## Carbon Paper
## &
## Typewriter Ribbons

They serve you longer with
crisp clear impressions.

*Manufacturers:*

**CEYLON CARBON PAPER CO.,**

**123, New Bullers Road,**
**COLOMBO - 4.**

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org